REGD. M. 4642

# திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 2—1—49 | இதழ் 29



சர்க்காரின் தடையை மீறி "இரணியன்" நாடகத்தை நடித்துச் சிறை சென்று திரும்பிய தோழர்களுக்கு 25—12—48-ல் காஞ்சிபுரத்தில் வரவேற்பு விழா நடந்தபோது எடுத்தபடம்.

உட்கார்ந்திருப்பவர்கள், இடமிருந்து வலம்:—

சுப்பிரமணியம், கச்சபாலயம், பூங்காவனம், சம்பந்தன், சண்முகம், எத்திராஜ்.

நிற்பவர்கள், இடமிருந்து வலம்:—

கோபால், நாராயணசாமி, கிருஷ்ணமூர்த்தி, மார்க், இராசமன்னர், கணபதி.

## சிறைச்சாலை என்ன செய்யும்?

16-ம் பக்கத் தொடர்ச்சி

அறிந்துகொள்ளும் வண்ணம் எங்கள் கூட்ட நிகழ்ச்சி வருவதில்லையானாலும், இருட்டடித்து விட்ட போதிலும், இரகசிய போலீசின் அறிக்கை, அமைச்சர்களை அலக்கழிக்கிறதே, அவர்கள் என்னசெய்வார்கள்? தூத்துக்குடியிலே 144; கோவில்பட்டியிலே தடையுத்தரவு—தருந்தவர்கள்மீது ஜாமீன் நடவடிக்கை; சாத்தூரில் கூட்டத்திற்கு அநுமதிகிடைப்பதா; மதுரையில் 144, திருச்சியில் தடை, சென்னையில்தடை, சேலத்தில் தடை, வேலூரில்தடை; விழுப்புரத்தில் தடை! நாடெங்கும் நல்லநாரமெங்கும் தடை உத்தரவு! எங்கள் சின்னக் கட்சியை அடக்க இந்த அடக்குமுறை தேவைப்படுகிறது ஆளவந்தார்களுக்கு! வெள்ளையர் ஆட்சியில்கூட இந்தவிபரீதத்தை நீங்கள் கண்டும் இருக்கமாட்டீர்கள்—கேட்டும்இருக்கமாட்டீர்கள்!

நல்ல வெளிச்சமில்லை என்று பிரகாசத்தை நீக்கிவிட்டு, இரமண சீடர், மௌனவிரதயாண்டினர், கிருத்திகை நோன்புக் கண்ணியர், கனம் மந்திரியாக வந்தார். கண்ட பலன் என்ன? நாடெங்கும் 144 தடை உத்தரவினூடே, தர்ம தேவதை நாலுகாலில் நடக்கிறது!

கும்பகோணத்திலே கூட்டத்திற்குத் தடைஉத்தரவு. எங்கள் கழகத்தினர், அத்தடையை மீறுகின்றனர். மனிதாபிமான அரசாங்கமாக இருந்தால்செய்திருக்கவேண்டியதென்ன? மீறினவர்களைக் கைதியாக்கிச் சட்டப்படி தண்டிக்கவேண்டும். நாகரிகமான சர்க்காரிடத்தில் எதிர்பார்க்கக்கூடியதும் இதுதான். ஆனால், ஓமந்தூரார் செய்வதென்ன? மலபார் போலீசை விட்டுத்தடிகொண்டு தாக்கச் சொல்லுகிறார்.

தண்டவாளத்தைப் பெயர்த்தார்களா அந்தத்தொண்டர்கள்? கனவிலும் நினைத்தவர்கள் அல்லவே அந்தத்தீவினையை அவர்கள். தபாலாபீசுக்குத் தீ வைத்தார்களா? அவர்களுக்கு அதற்கான தெளிவு கிடையாதே! தந்திக்கம்பியை அறுத்தார்களா? அந்த அற்புதத்தைப் புரியும் ஆற்றல் அவர்களுக்குக்கிடையாதே! அதிகாரிகள் முகத்தில் அக்னித்திராவகத்தை ஊற்றத் தெரிந்தவர்களா? அந்த அகிம்சா முறை, அவர்கள் கற்காத பாடமாயிற்றே! பின் அவர்கள் செய்த — செய்யும் குற்றம்தான் என்ன? தமிழ்வாழ்க!' என்று சொல்லும் 'பாவத்திற்கு' தரப்படும் தண்டனை, தடியடி!

வெள்ளையர் ஆட்சியில், பேச்சுரிமையைக்காக்கப் போராடியவீரகாங்கிரஸ் இளைஞர்களைக் கேட்கிறேன், இது தர்மந்தானா என்று? கஷ்ட நஷ்டம்பட்ட காங்கிரஸ் காளைகளைக் கேட்கிறேன், இது நம்மவர் ஆட்சிதானா என்று! நெஞ்சில் கைவைத்துக் கூறட்டும், இது நியாயந்தானாஎன்று! மும்முறை யோசித்து விட்டுக்கூறட்டும், இது நேர்மைதானா என்று!

இதற்குத்தானா திருப்பூர் குமரன் தன் இரத்தத்தால் தரையை நனைத்தது? இத்தகைய ஆட்சியைக்காண்பதற்குத்தானா, பாஞ்சால சிங்கம் லாலாலஜிபத்ராய் ஆவி துறந்தது? பகவத்சிங் தூக்கிலேறினது, இத்தகைய அலங்கோல வாழ்வை மக்களுக்கு வாங்கித் தருவதற்குத்தானா? இதற்குப் பெயர் சுயாட்சியா?

நாளையே புறப்படுங்கள்; கும்பகோணத்தில் சென்று பாருங்கள். எங்கள் தொண்டர்களின் குருதி தேகத்திலிருந்து பீறிட்டுவருவதைப் பாருங்கள்! தேகத்திலே தழும்பு தோன்றுவதைக்காணுங்கள்! தடியடி தாங்கமுடியாமல் தரையில்சோர்ந்து வீழ்ந்த பின்னரும், குறுந்தடியால் உபசரிப்பதை உணருங்கள்! பின்னர் வாருங்கள் ஒருமுடிவிற்கு. உங்கள் தியாகம் எதற்குப் பயன்படுத்தப்படுகிறது என்பதை நினையுங்கள்!

அன்று, 144 தடையுத்தரவைமீறினால், மீறி கூட்டம் நடத்தினால்,மீறுகிறவர்களை அழைத்துச் சென்று அல்லது தூக்கி போலீஸ் வண்டியில் ஏற்றிச்சென்று, தண்டித்துச்சிறைக் கனுப்பினதையும் பார்த்திருக்கிறீர்கள். இன்று குடந்தையில் நடப்பதை, அத்துடன் ஒத்திட்டுப்பாருங்கள். பிறகு கூறுங்கள். இந்த ஆட்சிக்குச் சுயாட்சி என்ற பெயர் பொருந்துமா என்பதை!

கொடிமுடி கோகிலம், தினம் தவறாமல் 'சிறைச்சாலைஎன்ன செய்யும்?' என்று பாடினதைக்கேட்டு, விழிப்பும் வீரமும் ஏற்பட்டதாகக் கூறி, விடுதலைப் போரில் விறு விறுப்புக் கொண்டீர்களே, தேசியத் தோழர்களே! அதுதேசியச்செவிக்கு மட்டுமன்று; எங்கள் செவிக்கும் கூடத்தான் என்பதை மறந்துவிடாதீர்கள்!

அதிமேதாவி என்று தப்பைத்தவறாகத் தீர்மானித்துக் கொண்டிருக்கிற ஓமந்தூரார், இலேசான தடியடிப் பிரயோகந்தான் செய்யப்படுகிறது என்று கூசாமல் கூறுகிறார். இரமணர் சீடராக இருந்து கற்ற பாடப்போதும் இது! ஏகாதிபத்திய வாதிகளும் அன்று இதேபாணியில் தான் கூறினர்! அவர்கள் விட்டுப்போன அதே அதிகார பீடத்தில் உட்கார்ந்துகொண்டுதான், அவர்கள் மொழியிலேயே பேசிப் பயிற்சி பெறுகிறார். யாக்கை நிலையாமை என்று அவர் அறிந்திருக்கிற அளவிற்கு, அதிகாரத்தின் நிலையற்ற தன்மையை அறிந்திருப்பதாகத் தெரியவில்லை!

"மொழி காப்பதல்ல இவர்கள் நோக்கம்—பதவியைக் கைப்பற்றவே இவர்கள் இவ்வாறு கிளர்ச்சி செய்கிறார்கள்." என்று எங்கள் கிளர்ச்சியைத் திரித்துக் கூறுகிறார்கள், வாய்மை தவறாத ஆளவந்தார்கள். இவர்கள் கூற்று உண்மையானது தான் என்று வைத்துக்கொண்டு பார்த்தாலும், அதில் இவர்கள் கண்ட குறைதான் என்ன? மாற்றுக்

(7-ம் பக்கம் பார்க்க)

விற்பனைக்குத் தயார்!

**காலண்டர்**

✻

1948-ம் வருடக் காலண்டர் நமது ஒப்பற்ற திராவிடத் தந்தை பெரியார், சி. என். அண்ணாத்துரை, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் முதலியவர்கள் உருவமைந்த கண்கவரும் அழகிய தனித்தனி காலண்டர் பெரிய அளவில் உயரிய வழவழப்பான ஆர்ட் தாளில் வெளிவந்துள்ளது.

**ஒன்றின் விலை 0—6—0**

மாதிரிக்கு ஏழு அணா தபால் பில்லைகள் அனுப்புக

மொத்த வியாபாரத்திற்கும் விபரத்திற்கும் எழுதவும்

விபரங்களுக்கு:—

**திராவிடன் பதிப்பகம்**

P.B. No. 18, வேலூர் N.A.

# படக் காட்சிகளில் பரமன்!

படக்காட்சிகளில் பரமன் வடிவெடுத்துப் பாடுவதும் ஆடுவதும் கூடாது. அவ்விதம் செய்வதைத் தடுக்கவேண்டும். அதற்கென ஒரு சட்டம் இயற்றவேண்டும். இது இன்றைய சர்க்காரின் ஏற்பாடுகளில் ஒன்றாக இருந்து வருவதாகத் தெரிகிறது. மாட்டுச் சாணத்தைச் சர்வவல்லமையுள்ள கடவுளாக வைத்து வணங்கும் ஒரு நாட்டில், மக்கள், கடவுள் வடிவம் கொண்டு நடிப்பதை அவ்வளவு பெரிய குற்றமாகக் கருதிவிட முடியாதென்றபோதிலும், மற்ற நாடுகளில் படக்காட்சிகளின் அமைப்பும் நோக்கமும் எதனை அடிப்படையாகக்கொண்டு இருக்கிறதென்பதையும், நம் நாட்டில் படக்காட்சிகளின் அமைப்பும் நோக்கமும் எதனை அடிப்படையாகக் கொண்டிருக்கிறதென்பதையும் ஒப்புநோக்கிப் பார்க்கும்போது, சர்க்காரின் இந்த ஏற்பாட்டை எவரும் குற்றம் என்று கருதிவிட முடியாது. அத்தி பூப்பதுபோல், சர்க்காரும் திடீரென்று ஒவ்வொரு நல்ல காரியங்களைச் செய்ய முற்பட்டுவிடுகின்றது. சர்க்கார், தனக்குமுன் நிற்கும் வானத்தை முட்டும் எதிர்ப்பைக்கூடப் பொருட்படுத்தாமல் சில நல்ல காரியங்களை — எதிர்பாராத விதத்தில் — எந்தக் காரணத்தைக் கொண்டோ செய்ய முற்பட்டுவிடுவது கண்டு களிக்கிறோம். சர்க்காரின் இந்தத்திட்டம் நடைமுறைக்கு வருமானால், இன்றைய நம்நாட்டுப் படவுலகில் ஒரு புரட்சிகரமான மாறுதல் ஏற்படும் என்பது உறுதி. ஆனால், இந்த ஏற்பாடு, மதமெனும் குரங்கால் மாய்த்தொழிக்கும் நிலை ஏற்பட்டால் அதனைச் சர்க்கார் சமாளித்து, எடுத்துக்கொண்ட காரியத்தை வெற்றிகரமாக நிறைவேற்றும் துணிவும், பக்கபலமும் அதற்கு இருக்கிறதா என்பது சந்தேகம் தான். ஏனென்றால், சர்க்காரின் இந்த ஏற்பாடு அறிக்கை வடிவில் வெளிவந்ததும், பரமனின் வார்சுப் பத்திரிகைகள் சில சர்க்காரின் இந்த ஏற்பாட்டைக் கண்டிக்கத்தொடங்கி விட்டன. சர்க்காரின் இந்த ஏற்பாட்டால் சினிமாத் தொழிலும், நாடகக்கலையும் மாய்ந்தொழியும் என்று மிகமிக மட்டரகமாக எழுதத் தொடங்கி விட்டன.

படக்காட்சிகளில் கடவுள் தோன்றினாலன்றிக் கலை வளராது என்று, 'கலை' என்றால், அது 'கடவுள்' தான் என்பதாக எண்ணும் சில கருத்தில் உரமற்றவர்கள் கருதுகிறார்கள். கலை நாகரிகம் என்ற சிறந்த மக்கட்பண்புகள், 'நம்முடைய' மகேசுவரன்களுக்கு முற்றிலும் புறம்பானவை என்பதை நம்மவர் பலர் உணராததாலேயே பட உலகில் 'கடவுள் தோன்றாவிட்டால் கலை அழிந்துபடும் என்று அலறுகிறார்கள். கலை—நாகரிகம் ஆகிய உயர்ந்த மக்கட் பண்புகளுக்கும், மக்கட்பண்புக்கு மிகத் தொலைவில் இருக்கும் 'நமது' கடவுளரின் பண்புகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை அறியவேண்டுமானால், நம்முன் கொட்டிக்குவித்து வைக்கப் பட்டிருக்கும் புராண—இதிகாசங்களை ஒருமுறை புரட்டிப்பார்த்தால் விளங்கிவிடுமே! இராமனுடைய இராமாயணத்தையும், கிருட்டினனுடைய பாகவதத்தையும், சிவனுடைய திருவிளையாடற் புராணத்தையும் படமாகப் பிடித்துக் காட்டினால் தான் கலை வளரும் என்ற பரிதாப நிலையிலுள்ளவர்கள், 'நம்முடைய' கடவுளர்கள் தங்கள் கரைபுரண்டோடும் காமஇச்சையை நிறைவேற்றுவதற்காகப், பகுத்தறிவற்ற விலங்கினங்களும் மேற்கொள்ளாத இழிந்த முறைகளைக் கையாண்டார்கள் என்ற செய்திகள்தானே புராண—இதிகாசங்களில் முதலிடம் பெற்றுள்ளன என்பதை அறியவும், உணரவும் முடியாதவர்களன்றி, மற்ற எவரும் புராண—இதிகாசங்களைப் படம்பிடிக்க வேண்டுமென்று கூறவே மாட்டார்கள். சிவன் மோகினியைத் துரத்திச்சென்ற கதையும், சுப்பிரமணியர் வள்ளியை வட்டமிட்ட கதையுப், கிருட்டினன் சத்தியபாமையிடம் சரசமாடிய கதையும், இந்திரன் அகலிகையை அணைந்த கதையும், பிரம்மா பார்வதியைப் பார்த்த கதையும், துரோபதை, ஐந்துபேர் கணவன்மாராக இருந்தும் ஆறாவது கணவன் தேவைப்படுகிறதென்று கூறிய கதையும், சீதை வால்மீகி ஆசிரமத்தில் இரண்டு குழந்தைகளைப் பெற்ற கதையும், அக்கினிதேவன் இருடியர் எழுவரின் மனைவிகளை விரும்பிய கதையும், பார்ப்பனப் 'பெருமகன்' ஒருவன், பெற்ற தாயைப் புணர்ந்து —தந்தையைக் கொன்ற கதையும், காட்டுப் பன்றிகளுக்கு நாட்டு அமைச்சரின் மனைவிமார்களை வாழ்க்கைத் துணைவியாக்கி அப்பன்றிகளையே நாட்டு அமைச்சர்களுமாக்கிய கதையும் இன்ன பிறவும் தானே புராண — இதிகாசங்களில் முதலிடம் பெற்று இன்றைய பட உலகுக்கு விருந்தளிப்பனவாக இருக்கின்றன! இக்கதைகளைப் படம் பிடித்துக் காட்டாவிட்டால், பாமர மக்களின் கடவுட் பற்றுக் குறைந்துவிடுமென்று சிலர் கூக்குரல் போட இப்பவே கிளப்பிவிட்டார்களே! கருவில் இருக்கும் சர்க்காரின் இந்தத் திட்டம் உருவாகிவிட்டால் உலகமே அழிந்துவிடுமென்று இவர்கள் உறுமிக் கிளம்பி இன்னும் அதிகமான உரத்த குரலில் பேசுவார்களே! சர்க்கார் இவ்வளவையும் தாண்டியன்றோ தங்கள் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்! முடியுமா? செய்வார்களா? பொறுத்திருந்து பார்ப்போம்.

இனி, இப்போது சர்க்கார் கொண்டுவர இருக்கும் திட்டமானது, எந்த அடிப்படையில் கொண்டுவரப்படுகின்றது? அதனால் உண்டாகும் நன்மைகள் என்னென்ன? என்பனவற்றைப் பற்றியும் சிறிது ஆராய்வது இந்தத் திட்டத்தைக் கொண்டுவர இருக்கும் சர்க்காருக்குப் பயன்படும் என்று கருதுகிறோம். எனவே, இன்று படக் காட்சிகளில் பரமன் வடிவத்தில் தோன்றி நடிப்பதானது, பரமனுடைய மதிப்பையும் உயர்வையும் குறைப்பதாக இருக்கிறது; ஆகையால், இந்த நடிப்பு முறையையே இல்லாமல் செய்துவிட்டால், கடவுளின் கௌரவம் காப்பாற்றப்படும் என்ற அடிப்படையிலேயே சர்க்கார் இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதாகத் தெரிகிறது. கடவுளின் கௌரவத்தைக் காப்பாற்றுவதோ அன்றிக் குறைப்பதோ நம்மால் முடியக்கூடிய காரியமா? என்பதை

முதலில் கடவுளன்பர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். கடவுள் தன்மையைப்பற்றி மதநூல்களில் கூறப்பட்டிருக்கும் விளக்கங்களை உணராதவர்கள்தான் அவருடைய கௌரவத்தைக் காப்பாற்றவேண்டுமென்று கருதுவார்கள்!

மக்களின் அறிவுக்கு அப்பாற்பட்ட ஒரு பொருள் கடவுள் என்ற பெயரோடு நின்று இவ்வுலகத்தை இயக்குகின்றதென்பது மதநூலார் கொள்கை. மதநூலார் இலக்கணப்படி, கடவுள் உண்டு என்று கூறுவதே அவர்கள் கொள்கைக்குத் தவறுண்டாக்குவதாகும். எப்படியென்றால், "ஓசை ஒலி எல்லாம் ஆனாய் நீ என்றபின்னர் பேசஇரண்டுண்டோ" என்பது மத நூற்றுணிபாகும். எனவே, உயிர்கள் அனைத்திற்கும் பொதுவாயும்—தந்தையாயும்—எல்லாமாயும் — எங்குமாயும் — உள்ள ஒரு பொருளை உண்டென்று கூறுவது போன்ற அறியாமையும் அதன் கௌரவத்தைக் காப்பாற்றவேண்டும்—அதற்குச் சட்டமியற்றவேண்டுமென்ற நெட்டுயிர்ப்பும் வேடிக்கையாகவே இருக்கிறது. கடற் சிப்பியில் முத்து இருக்கிறதென்று ஒருவன் கூறுவது இயற்கைக்கு மாறுபட்டதாகாது. என்றாலும் அது பலருக்கு வியப்பைத் தருகின்றது. காரணம்: கடற் சிப்பியில் முத்து என்ற ஒரு மதிப்புடைப் பொருள் இருக்கிறதென்பதை அறியாதார் சிலர் இருக்கக்கூடும் என்பதால். கடற் சிப்பியில் முத்து இருக்கிறதென்பதை அதனை அறிந்தான் ஒருவன் கூறுவது வியத்தற்குரியதும் இயற்கைக்கு மாறுபடாததுமாகும். ஆனால் 'நமது' கடவுள் அப்படிப்பட்டவரன்று; கடற்சிப்பி முத்துப்போல் ஒருகுறிப்பிட்ட இடத்தில் மறைந்து இருப்பவருமன்று. ஒரு இடத்தில் இருப்பதும், மற்றை இடங்களில் இல்லாததுமான ஒன்றைத்தான், அது இன்ன இடத்தில் இன்ன தன்மையோடு இருக்கிறதென்று, அறிந்தான் ஒருவன் அதனை அறியாதார்க்கு அறிவிக்கவேண்டும். அங்ஙனமன்றி, எல்லாமாய்—எங்குமாய்—அணுவுக்கணுவாய் — அகண்டமாய்—எதிலும் பிரிவற நிற்பதாகச் சொல்லப்படும் ஒன்றை, ஒருவன் உண்டென்று கூறும் அறியாமையை அளப்பதற்குக் கருவியே இல்லை. ஒருவனால் உண்டென்று சொல்லப்படும் ஒரு பொருள், யாதாமொரு கருவியாலோ—அறிவாலோ அளந்தறிந்து உணரக்கூடியதாயும் இருத்தல் வேண்டும். ஆனால், கடவுள், அளப்பரும் இயல்பினதாய்—மறை முதல் சொல் ஈறாகவுள்ள எந்தக் குறைவிலா அளவினாலும் அளந்தறிய முடியாதென்று முழங்கிய பின், ஒருவன், அதனைக்கண்டறிந்து அளந்தவனாவானா? அதன் கௌரவத்தைக் காப்பாற்றத்தான் முயல்வானா? முடியுமா? அன்றி, அப்பொருள் ஒருவனால் அளந்தறியப்படுவதற்கு அது எங்காவது ஒரு இடத்தில் தனித்திருந்தாலன்றி முடியுமா?

ஒருவன், ஒரு பொருளை உண்டென்று கூறுவானாயின், அவன், அப்பொருளைக் கண்டிருத்தல் வேண்டுமன்றோ! எனவே ஒருவனால், காணப்பட்டு, மற்றவர்களால் காணப்படாத ஒன்றைக் 'கடவுள்' என்றழைப்பது மத நூலார் கொள்கைக்கே மாறுபட்டதாகும். எப்படியென்றால், காணமுடியாதது எதுவோ அதுவே கடவுள் என்பது மதநூலார் கொள்கை, எனவே, காணமுடியாதது எது என ஆராயுமிடத்து, எது இல்லாததோ அதுவே காணமுடியாததுமாகும் என்ற உண்மை பெறப்படுகின்றது. அன்றியும், மக்களால் எளிதில் அறிந்து கொள்ள முடியாத கடற்சிப்பிமுத்துப்போலக், கடவுளும் எங்காவது ஒரு மறைவிடத்தில் தனியாக இருப்பதாகக் கொள்ளவும் மத நூற்கள் இடந்தருவதில்லையே! கடவுள் இல்லாத இடமே இல்லை என்பது தான் அந் நூற்களின் முடிந்த முடிபாகும். எனவே, கடவுளை அறிந்ததாகக் கூறுபவனும், கடவுளைக் காப்பாற்றா விட்டால் அதன் கௌரவம் குறைந்து விடுமென்று கருதும் 'நிறைமதி'யாளனும், மணற்சோற்றில் கல் ஆராய்பவனும் ஒரே வகுப்பில் படிக்கும் மாணவர்களே யாவார்கள்.

இனி, மத நூல்கள் சிலவற்றில் கூறியுள்ளபடி, 'தேடினால் கிடைப்பர்' என்ற முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளை நம்பி, அவ்வழி சென்றோரெல்லாம், அத்துறையைக் காணாது சலிப்படைந்து, தங்கள் ஏமாந்த இயல்பினை இனிதியம்பியுள்ளனர். பட்டினத்தார், நாவுக்கரசர், புத்தர் முதலாயினோர் அவ்வழிபோய் மீண்ட பலருட் சிலராவர். ஈனா வாழைமரத்தின் மட்டைகளை ஒவ்வொன்றாக உரித்துப் பார்த்தால், உரிக்கப்பட்ட அம் மட்டைகளைத் தவிர, அதனுள்ளே வேறொன்றும் இல்லாமை புலப்படுவது போல், மத நூல்கள் கூறிய வழிகளிலே சென்றவர்கள், தாங்கள் கருதிப்போன 'கடவுள்' காணப்படாமையைக் கருத்தோடு திருத்தமாகக் கூறியுள்ளார்கள். எனவே, இல்லாதஒன்றைஉண்டென்னும் கொள்கைஎன்றைக்குத்தோன்றியதோ, அன்றிருந்தே அக்கூற்று மறுக்கப்பட்டும் வந்திருக்கிறது — வருகிறது. ஆனால், உண்மைக்கும் உலகுக்கும் உள்ள தொடர்பு மதக் கொள்கைகளால் பிரித்துப் பிளவுபடுத்தப்பட்டிருப்பதால், பொய்யை பொய்யெனக் கொள்ளும் பேதைமையே பெருமை பெற்று வருகின்றது. இதனால், உண்மைகளை உருவாக்குவதற்குப் பெருமுயற்சியும், பேருழைப்பும், பெருந் துணிவும், இடுக்கண் வந்தால் ஏற்கும் இயல்பும் இன்றியமையாது வேண்டப்படுகின்றன. இஞ்ஞான்றை உலகம் இத்துறையில் ஓரளவு வெற்றி பெற்று வருவது கண்கூடு. காரணம்! மக்களிடையே மங்கிக்கிடந்த பகுத்தறிவென்னும் பகலவன் தன் ஒளி அலைகளால், விரிந்த உலகின் சரிந்தகொள்கைகளை விழ்த்தும் ஆராய்ச்சித் துறையின் அணிகலமாக விளங்குவதால் என்க. இந்த ஆராய்ச்சியின் பயன், அரசியலாரைக்கூடப், படக்காட்சிகளில் பரமன் வடிவில் நடிப்பது கூடாது என்ற அளவுக்காவது சீர்திருத்தம் செய்யவேண்டுமென்ற எண்ணத்தை உண்டாக்கி விட்டதென்றால், இன்றைய உலகம் எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறதென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

இதுமட்டுமல்ல, இன்றைய இந்திய யூனியனுக்குத்தலைவராக (பிரசிடெண்டாக) வருபவர், தம்முடைய கடமைகளைச் சரிவரச் செய்வேன் என்பதாக எடுத்துக்கொள்ளப்படும் விசுவாசப்பிரமாணம் கடவுள் பேரால் செய்யப்படவேண்டுமா அல்லது வேண்டாமா? என்று விவாதிக்குமளவுக்குக், கடவுள்பற்றிய கருத்தும் நம்பிக்கையும் முன்னர்க்காலம் போலன்றி மாறுதல் அடைந்து வருகின்றதென்பதும், பேரறிஞர்கள் செய்துவரும் இத்தகைய ஆராய்ச்சிகளுக்கு அரண் செய்வதாகவே இருப்பது கண்டு மகிழ்கிறோம்.

இனிப், படஉலகில் பரமன் தோன்றுவதால், அவருடைய கௌரவம் அதாவது மதிப்பும் உயர்வும் குறைந்துவருகிறதென்று கருதுபவர்

(13-ம்பக்கம் பார்க்க)

# ஏன்—எப்படி—எதற்காக?

—✻—

நாடு சுதந்திரம் அடைந்துவிட்டது. நாம் நாட்டுக்கு நல்லதென்று நினைத்ததை எல்லாம் செய்வதற்குத் தடையாக இருந்த அந்நிய ஆங்கில ஏகாதிபத்யம் அகன்றுவிட்டது. நம்முடைய கனவுகள் எல்லாம் நினைவாகும் காலம் வந்துவிட்டது. எனவே, நினைவாக மாறிய கனவுகளை எல்லாம் இனி நிலையான செயல் முறையில் கொண்டு நடைமுறையில் உலவ விடுவதுதான் நம்முன் எஞ்சி நிற்கும் பணி என்ற நல்லெண்ணம் ஏற்படுவதும், அவற்றிற்கான ஆக்க வேலைகளில் ஈடுபடுவதும், நீண்டகாலமாகப் பிறர் ஆதிக்கத்திற்கு அடிமைப்பட்டுக் கிடந்து அவதியுற்ற ஒரு நாட்டு மக்களுக்கு இயற்கையாகவே உண்டாகும் உரிமை உணர்ச்சியாகும். இதனைத் தவறென்று எவரும் கூறிவிட முடியாது.

ஆனால், பெற்ற சுதந்திரத்தைப் பிறர் நகைக்கும்படி நடத்திச் சென்றால், சுதந்திரம் பெற்றது இதற்குத்தானா? என்று பிறரல்ல—நாமும் எண்ணி வேதனைப்படாமல் இருக்க முடியுமா? "காங்கிரசின் ஜனநாயகத் தன்மையும், சகிப்புத் தன்மையும் எங்கே ஓடி ஒளிந்திருக்கின்றன என்று விளக்குக்கொண்டு தேடவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது" என்று சுதந்திரம் பெறுவதில் பெரும் பங்கெடுத்துப் பணியாற்றியவர்களே கூறி வருந்தக்கூடிய முறையிலும் அளவிலும், நம்முடைய சுதந்திர ஆட்சியின் ஆரம்பமே அமையுமானால், இன்னும் போகப் போக நம்முடைய சுதந்திர ஆட்சி முறை நமக்கு என்னென்ன எதிர்பாராத பயங்கரமான ஆபத்துக்களை எல்லாம் உண்டாக்கிவிடுமோ என்ற அச்சம் இயல்பாக உண்டாகாமல் இருக்கமுடியுமா?

நாட்டை ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களுக்கே, அதன் ஆட்சி முறை அலங்கோலமாகக் காட்சியளிக்கிறதென்றால், அதன் எதிர்க்கட்சிகளுக்கு இந்த ஆட்சி முறை எந்தவிதத்தில் காட்சியளிக்கும் என்பதனைக் காங்கிரஸ் நண்பர்கள் எண்ணிப்பார்க்க வேண்டுகிறோம். நாம் சர்க்காரை ஏதாவது குறைகூறினால், இது எதிர்க்கட்சிக்காரர்களின் 'குறுகிய' மனப்பான்மையால் கூறப்படும் குற்றச்சாட்டென்று கருதும் சில கோணல் மதியினர், அவ்வப்போது காங்கிரஸ் சர்க்காரில் நடைபெறும் ஊழல்களை அதே காங்கிரஸ் சர்க்காரை ஆதரிக்கும் ஏடுகளே எடுத்துக்காட்டி அம்பலப்படுத்துகின்றன என்பதையும் அவ்வப்போது கவனித்து வருவார்களானால், நாம் கூறுவதில் உண்மை இருக்கிறது என்பதை உணர்வர்.

சுதந்திரம் கிடைத்த பின்னர் செய்யப்பட்ட — செய்யப்படுகின்ற காரியங்கள் பல, அவற்றைச் செய்பவர்களின் திறமைக் குறைவையே காட்டுகின்றன என்று சுதந்திர சர்க்காரை ஆதரிப்பதற்குத் தங்களுக்குத்தான் உரிமையும் பொறுப்பும் உண்டென்று சொல்லிக்கொள்ளும் பத்திரிகைகளே எழுதுகின்றனவே! எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்ச்சியை மட்டும் இங்கு குறிப்பிடுகின்றோம்.

சுதந்திரம் பெற்ற நம் நாட்டில் உள்ள பல்கலைக் கழகங்களில் கற்பிக்கப்பட வேண்டிய முறைகளைப் பற்றி 'நம்ம சர்க்கார்' ஒன்றும் தெரியாத முறையில் காரியங்கள் செய்யப்பட்டு வருகிறதென்ற குற்றச்சாட்டை நாம் சுமத்தவில்லை— நாம்தான் எதிர்க் கட்சிக்காரராயிற்றே! சர்க்கார் கட்சியைச் சார்ந்த பத்திரிகை சுமத்துகிறது இந்தக் குற்றச்சாட்டை!

"பாடத்திட்டம் பற்றியும், போதனா முறைகள் பற்றியும், மொழிகள் பற்றியும் மாறுதல் செய்யவேண்டுமென்று விரும்பும் மந்திரிகள், சர்வ கலாசாலைகளின் முக்கியமான இலட்சியத்துக்குத் தமது பிரேரணைகளும் உத்தரவும் உதவியாகுமா, அல்லது முட்டுக்கட்டையாகுமா என்பதில் கவனம் செலுத்துவது அவசியம்"

என்று 'தினமணி' தனது 29-12-48 தலையங்கத்தில் எழுதியிருக்கிறது. இதன்பொருள் என்ன? மந்திரிகள் முன்பின் யோசனையின்றி எதெதையோ செய்துவிடுகிறார்கள்— அவை பயனற்றவை — நாட்டு நலனுக்கு உகந்தவையல்ல என்பது தானே மந்திரிகளைப்பற்றி அந்தப் பத்திரிகை இப்படி எழுதுவதற்கு அடிப்படைக் காரணமாக இருக்க முடியும். இல்லையேல், "மந்திரிகள் இவற்றில் கவனம் செலுத்துவது அவசியம்" என்று ஏன் எழுதவேண்டும்? கவனம் செலுத்துவது அவசியம் என்று எழுதுவதென்றால், அவர்கள் (மந்திரிகள்) எதிலும் கவனம் செலுத்தாமலே காரியங்களைச் செய்துவருகின்றனர் என்றுதானே பொருள்! நம்முடைய மந்திரிகள் தாங்கள் செய்யும் காரியங்களை எல்லாம் தான்தோன்றித்தனமாகவே செய்கிறார்கள் என்பதைப் பொது மக்களுக்கு விளக்கிக் காட்டும் முறையில்,

"சர்வகலாசாலைக்காரர்கள் எல்லாரும் பழையமனப்பான்மையில் ஊறிப்போனவர்கள்; எந்த மாறுதலையும் அவர்கள் எதிர்க்கத்தான் செய்வார்கள்; அவர்களுடைய எதிர்ப்பைப் பொருட்படுத்தக்கூடாது என்று மந்திரிகள் கருதுவதுண்டு. இது சரியான மனப்பான்மையல்ல. ஏனென்றால், மந்திரிகள் கல்வி நிபுணர்கள் அல்ல; போதனாமுறையிலும் நிபுணர்கள் அல்ல. ஆகையால் இவர்கள் தமது கருத்தை, சர்வகலாசாலைப் பிரமுகர்களிடம் தெரிவித்து அவர்களுடன் விவாதித்து அவர்கள் ஒப்புக்கொள்ளக்கூடிய மாறுதல்களை மட்டுந்தான் சர்க்காரின் அதிகாரத்தின்மூலம் அமுலுக்குக்கொண்டு வரவேண்டும்"

என்று 'தினமணி' மேலும் எழுதித் தன்னுடைய கருத்தை விளக்கி, அமைச்சர்களுக்கு அறிவுரைபுகட்டுகிறது. அமைச்சர்கள் கல்வி நிபுணர்களல்ல — போதனாமுறை நிபுணர்களல்ல என்ற குற்றச்சாட்டை அவர்கள்மீது சுமத்தி, அவர்கள் தாங்கள் செய்யும் காரியங்களை, அதிகாரத்தின் வாயிலாக நடைமுறைக்குக்கொண்டுவருவதற்கு முன், அந்தந்தத் துறையில் வல்லுநர்களாய் உள்ளவர்களைக் கலந்து அவர்கள் ஒப்புக்கொள்ளக்கூடிய மாறுதல்களை மட்டும்தான் செய்யவேண்டுமென்று எச்சரிக்கை செய்கிறது.

"நம்ம சர்க்காரைப்" பற்றி நாம்

ஏதாவது குறைவாக எழுதினால் நம்மை ஏளனம் செய்யும் காங்கிரஸ் நண்பர்கள், 'தினமணி' எழுதுகிறதே. "மந்திரிகள் கல்வி நிபுணர்கள் அல்ல, போதனாமுறை நிபுணர்களும் அல்ல" என்று என்பதை எண்ணிப்பார்க்கவேண்டாமா என்று கேட்கிறோம். எதற்கெடுத்தாலும் சர்க்காரைக் குறைகூறுவதே இவர்களின் தொழில் என்று நம்மை நையாண்டி செய்யும் காங்கிரஸ் நண்பர்கள் ஏன் இப்போது வாய்மூடி மௌனிகளாக இருக்கின்றனர்? வெட்கத்தைவிட்டு ஒப்புக்கொள்ள வேண்டாமா அமைச்சர்களின் அறிவில் பழுது ஏற்பட்டிருக்கிறது — அவர்களால் செய்யப்படுகின்ற காரியங்கள் எல்லாம் நாட்டு மக்களின் நலனுக்குத் தீமையை உண்டாக்குவனவாக இருக்கிறதென்று நாம் கூறும் உண்மைகளை?

டாக்டர் இலட்சுமணசாமி அவர்கள், "நாட்டின் சுதந்திரப வரம்பின்றி வேலை செய்கிறது—'தரம்' குறைவாக இருக்கிறது—திறமைக்கு உகந்ததாய் இல்லை—சர்வகலாசாலைப் படிப்பு எவ்வித நோக்கமும் இல்லாமல் தாட்படுகிறது—அடிப்படை உண்மை கவனிக்கப்படவில்லை—முன்னேற்றத்தைப் பாதிக்கிறது—வெற்றியை உறுதி செய்யக்கூடிய நிலைமைகள் தோற்றுவிக்கப்படவில்லை—அவசரப்பட்டுக் காரியங்களைச் செய்கின்றனர்"-என்ற இன்னபிற குற்றச்சாட்டுகளை அமைச்சர்கள் மீது சுமத்துகிறார். இதற்குத் 'தினமணி' நற்சாட்சிப் பத்திரம் வழங்குகிறது, 'டாக்டர் கூறுவதை யாரும் ஆட்சேபிக்க முடியாது' என்று.

சுதந்திர சர்க்கார் செய்யும் எந்தக் காரியமும் திருப்திகரமாக இல்லையென்று அந்தந்தத் துறைகளில் உள்ளவர்களையும் குறை கூறும் நிலைமையைத்தவிர, சுதந்திரம் கிடைத்தபின் நாம் அடைந்த பலனோ அல்லது அடையலாம் என்ற நம்பிக்கையை ஊட்டும் பலனுள்ள காரியங்களோ நடைபெறுகின்றன என்று சொல்வதற்கில்லாத முறையில் சர்க்கார்—நமது சர்க்கார் காரியங்களைச் செய்து வருகின்றது. மதுவிலக்கு போன்ற சில நன்மைகள்கூட மக்களால் மறந்து விடக்கூடிய அளவுக்குச் சர்க்கார் நடந்து வருவதைக் கண்டு யார்தான் அச்சப்படாமல் இருக்க முடியும்? யார்தான் சர்க்காரின் தவறான போக்குகளைக் கண்டிக்காமல் இருக்க முடியும்? நாம் தான் சின்னக் கட்சி—சர்க்காரின் அகராதிப்படி! நம்முடைய கண்டனங்கள் சர்க்காரின் செவிக்கும், கருத்துக்கும் எட்டாது என்று வைத்துக் கொண்டாலும், சர்க்கார் கட்சியே சர்க்காரை கண்டிக்க கிளப்பி விட்டதே! மறைமுகமாகப் பலரும், வெளிப்படையாகவே சிலரும் 'தங்கள்' சர்க்காரின் போக்கைக் கண்டிக்கவும், எச்சரிக்கை செய்யவும், மாகாண மந்திரி சபைகளில் அடிக்கடி மாற்றங்களை உண்டாக்கிப் புது மந்திரிகளைப் பீடங்களில் அமர்த்தவும் முற்பட்டுவிட்டார்களே! இவை எல்லாம் ஆளும் திறமை இவர்களுக்கு (இன்றைய சர்க்காருக்கு) இல்லை என்பதைத் தவிர, வேறு எதைக் காட்டுகிறது? 'பட்டாபி, பூசி மெழுகிப் பேசுகிறார்!' 'பண்டிதர் வழவழ என்றுபேசுகிறார்!' 'பட்டேல் முதலாளிகள் பக்கம் பேசுகிறார்!' 'மாகாண அமைச்சர்களுக்கு மதி துலக்கமில்லை!' என்பன போன்ற கண்டனங்கள் காங்கிரஸ் முகாமிலிருந்தே கிளம்புகின்றனவே! ஏன்? எப்படி? எதற்காக? கூறவேண்டாம், யோசியுங்கள் காங்கிரஸ் நண்பர்களே!

# எவ்வளவு காலம் பிடிக்கும்?

அதிகாரம் பெற்றிருப்பவர்கள், அந்த அதிகாரத்தை மக்கள் விருப்பத்தின்மீது பெற்றிருக்கவில்லையானாலும், மக்களின் தேவைகளைத் தெரிந்து, அவர்களுக்கு வாழ்வளிப்பதற்கான வழித்துறைகளை, தாமதிக்காமல் செயலாற்ற முன்வருவார்களானால், மக்கள் ஆட்சி அமைப்பின் சாரத்தை நிறைவேற்றினவர்களாவார்கள். வேறு கட்சியினர் மக்களை வெறும் வார்த்தைகளினால் மயக்கினாலும், அதிகாரத்திலிருப்போர் தங்கள் அரும் செயல்களால் அளிக்கும் சுகவாழ்வை, மக்கள் மறந்து விடவோ, ஒத்துழைக்க மறுத்துவிடவோ மாட்டார்கள். மக்களின் வாழ்வில் முன்னேற்றமில்லாமல், நாளுக்கு நாள் சீர்குலைவு ஏற்பட்டு வேதனை பெருகிக்கொண்டு இருக்கும்பொழுது, ஏதேதோ கூறினவர்கள் அதிகாரத்தில் அமர்ந்த பின்னரும், தங்கள் நிலையில் எந்தவித மாற்றமும் உருவாகாமல் இருப்பதைக் கண்ட ஏமாற்றமும், சொல்லிலே நம்பிக்கைவைத்து உரிமையை இழந்து விடுதலைக்கான வழி விளக்கமாகத் தெரியாததால் ஏற்படும் எரிச்சலும், சேர்ந்துவிடுமானால், படும் கஷ்டத்தைச் சித்தரிக்கும் வார்த்தைகள்-அதிகாரத்திலுள்ளோரின் தவறை சுட்டிக்காட்டும் குற்றச்சாட்டுகள் — தங்கள் திட்டத்தின் அருமை பெருமைகளை விளக்கிக் காட்டும் மோசனச் சொற்கள், மாற்றுக் கட்சியினரின் அணியில் மக்களைக் கொண்டு சேர்த்துவிடுவது உறுதி. இதுவே இயற்கையுமாகும்.

வாழ்த்துக் கூறிய மக்கள்—வரவேற்பளித்த மக்கள் — மாலை மரியாதை செய்த மக்கள்—'வராதே இங்கே "திரும்பிப் போ"' என்று முழங்கிக்கொண்டு, கருப்புக் கொடிகள் தாங்கி வெறுப்பை வெளியாக்குவார்களானால், அதிகாரத்திலிருப்போர்களுக்கு அமைதி அழிந்து, சாந்தம் தொலைந்து, ஆத்திரமும்—அதிகாரத்தின் வல்லமையைக் காட்டிக்கொள்ள வேண்டுமென்ற ஆசையும் கிளர்ந்து எழும்பி, மக்களை அடக்க ஏவுகின்றனர் படையை. மக்கள் ஆதரவுபற்றி அந்தாதி பாடி வந்தவர்கள், மக்கள் எழுச்சியை அடக்க அடக்குமுறைகளுக்கு அருட்பாடும் நிலையைப் பெற்றுவிடுகின்றனர். அத்துடனும், அவர்கள் பெற்றுள்ள அதிகாரம் அவர்களை ஆட்டிப் படைப்பதை நிறுத்திவிடுவதில்லை. மேலும் அது வேலை செய்யத் துவங்கிவிடுகிறது. முன்னாள் எந்த மக்களைப்பற்றி உயர்வாகக் கொண்டிருந்தார்களோ, அதே மக்களைக் குறித்து இழிவாகப்பேசவும், அலட்சியப்படுத்திக் கூறவும், துணிவைக் கொடுக்கிறது அதிகாரம்.

அதிகாரத்திலிருப்போரின் நிலை இதுவானால், அறிவு படைத்தவர்கள் என்று சொல்லுபவர்களின் நிலை, இதனைக் காட்டிலும் மோசமானதாக இருக்கிறது. சொந்தத்தில் சுகவாழ்வு வாழ்ந்துகொண்டு, காலை படுக்கையில் படுத்தபடியே

'பெட் காபி'யும், பல் விளக்கப் பசையும் பிரஷும், வாய் கொப்பளிக்க இளவெந்நீரும், முகம் துடைக்க 'பாத் டவலும்,' உயிர் சத்துக்களின் குறைவை நிறைவு செய்ய 'வாட்டர் பெரீஸ் காம்பவுண்டும்', அதற்குமேல் சத்தான காலை உணவும், ஓவல்டின் பானமும், பகல் உணவிற்கு முன்னர் 'பார்லி வாட்டரும்', பகல் உணவிற்கு வெண்ணெய் காய்ச்சின நெய்யும், பற்பலவிதமான 'வெஜிடபில்களும்', இடைவேளையையும் இரவையும் இதேமாதிரி கழித்துவிட்டு, வாழ்க்கைப் போராட்டத்தின் விதவிதமான வேதனைகள் தெரியாது, ஆத்மாவிற்கும் ஆண்டவனுக்கும் உள்ள தொடர்பைப்பற்றி, ஊருக்கு உபதேசம் புரிவதை வாழ்வின் லட்சியமாகக் கொண்டிருக்கிறார்கள். அதிகாரத்திலிருப்போர்களைக் காட்டிலும், இவர்கள் மக்களுக்கு அதிகக் கேட்டினை, தங்கள் பிரசாரத்தின் மூலம் செய்துவிடுகிறார்கள். எந்தக் கல்வி நமது மாணவர்களை, மக்கள் பண்புடையவர்களாக மாற்றிற்றோ, அதே கல்வியைத் தங்கள் கருவியாகக்கொண்டு, மாணவர்களை மந்த மதியினராக மாற்றிவிட முயலுகின்றனர் — மாணவர்கள் எதிர்காலத்தை ஆக்கக் கூடிய இளைஞர்கள். கொடி ஏந்தவும் கூவவும் மட்டும் அவர்கள் கற்றிருக்கவில்லை. இன்பபுரிக்கு இட்டுச் செல்லும் பொறுப்பும், தகுதியும், திறமையும் கொண்டவர்கள் அவர்கள். அவர்கள் இரத்தத்தில், நஞ்சூட்டப்படுகிறது, இந்தக் கற்றறிந்த மேதைகளால். இவர்களின் பயக்க வார்த்தைகளில் மயங்கிவிட்டால், மக்கள் முன்னேற்றம் மரத்திற்கு மரம் தாவும் மாண்பு பெற்றுவிடும்!

இந்தத் தத்துவபோதகர்கள், எதிர்காலம் எப்படி இருந்தால் மக்கள் குலம் நல்வாழ்வு பெறும், போரும் பிணக்குமின்றிச் சாந்தி நிலவும், மக்கள் மக்களாக வாழ வகை பிறக்கும் என்னும் எந்தக் கோட்பாடும் இவர்களுக்குத் தெரியாது. தெரிந்தாலும், அதனைத் தகர்க்கவே துணிவு கொள்வர். சுயநலம்—வடிகட்டின சுயநலம். அவர்களை இந்தத் தவறான கொலைத் தொழிலை செய்யத் தூண்டுகிறது. ஒருவனைக் கொலை செய்துவிடுவது கூட அவ்வளவு குற்றமுடையது அன்று, அவனுடைய சிந்தனையைக் கொலைசெய்வது மிகப்பெரும் குற்றமுடையதாகும். எந்தச் சிந்தனை சக்தியால் மனிதன் உயர்ந்தவன் என்று கொள்ளப்படுகிறானோ, அது மனிதனின் வளர்ச்சிக்கு மூலகாரணமாக இருந்ததோ அதனையே தடுத்து விட்டால்,—வீழ்ச்சியுறச்செய்துவிட்டால் மனிதன் மனிதப் பண்போடு இருப்பது எவ்வாறு கூடுமோ, நாம் அறியோம்.

காலை 'பெட் காபி' தன் கையே பட்டுத் தரையில் சாய்ந்துவிட்டால், காலை உணவிலே எட்டுக்கால் பூச்சி இருக்கக்கண்டால், பகல் உணவில் உப்பு அதிகரித்துப் போயிருந்தால், மோட்டாரில் முன்காலை வைத்தவுடன் டிக்கட்டு முறிந்து விழுந்தால் அந்த நேரத்திலும் ஆத்மாவிற்கும் ஆண்டவனுக்கும் உள்ள நெருக்கத்தை அளந்து பார்க்கவா இந்த ஆத்மவாதிகளுக்கு விருப்பம் இருக்கும். சமையல்காரனும் சாபரும் அன்றோ சங்கடத்துக்குள்ளாகி இருப்பர் இந்த உபதேசிகளால். ஆத்ம பரிசோதனை அஸ்தமித்து அன்றோ போயிருக்கும்!

மண்வெட்டியும், மரவெட்டியும் இத்தகையவர்களிடம் கொடுத்து, அரைக்காணி நிலத்தை கொத்தியாகட்டும்— ரத் துண்டைப் பிளந்தாகட்டும் என்று எவராவது கட்டளை இட்டால், அப்பொழுது தெரியும் வாழ்க்கைப் போராட்டத்தின் பயங்கர வேதனை. இந்த மாற்றம் ஏற்படாத வரையில், வேதாந்தபோதனை அவர்களுக்கு வாழ்வளிக்கும் வேட்டை நிலமாகத்தான் இருக்கும்.

(12-ம் பக்கம் பார்க்க)

## சிறைச்சாலை என்ன செய்யும்?

2-ம் பக்கத் தொடர்ச்சி

கட்சியினர், தங்கள் இலட்சியங்களை நிறைவேற்ற, அதிகாரத்தைப் பெற, அதற்கான முயற்சியை மேற்கொள்வது, மக்களாட்சிக் கோட்பாட்டுக்கு முரண்பட்டதா? அதிகாரத்திலென்றும் இருந்துத் தீரவேண்டிய கட்சி காங்கிரஸ் கட்சிதான் என்று பாத்தியதைக் கொண்டாடுவது ஜனநாயக முறைதானா? அதிகாரத்திலுள்ள கட்சி வரம்பு கடந்து நடந்துகொள்வதைத் தடுக்கவும், தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளவும், தக்கதோர் எதிர்க்கட்சி அமைவது, மக்களாட்சிமுறைக்கு ஒவ்வாததா? எதிர்க்கட்சியே இருக்கக்கூடாது என்று பேசும் இவர்களின் இருதயம் களங்கமற்றது என்று எவ்வாறு நம்ப முடியும்? இவர்கள் வகிக்கும் பதவி என்ன, இவர்களுடைய பிதிரார்ஜிதமா? எவரையும் கிட்டே நெருங்கவிடாமல் பார்த்துக்கொள்ள, இவர்களுக்கு என்ன அது பரம்பரைச் சொத்தா? பாசிசப் போக்கு உதவாது! விழிப்படைந்த மக்களிடம், இவர்களுடைய ஜனநாயக வேஷம் கலைந்து விடுவது முக்காலும் உறுதி. அடக்குமுறை, போலீஸ் தடியடி, முதலியன, இவர்கள் விரைந்து செல்லும் அழிவுப்பாதையை, அணையிட்டுத் தடுத்துவிடாது! இந்த அறிவுரை, ஆளவந்தார்களால் புரிந்துகொள்ள முடியாது. இந்த அளவிற்கு அதிகார போதைத் தலைக்கேறி விட்டிருக்கிறது. போகும்பேய் சும்மா போகாது என்பதுபோல், தடியடி தர்பாரும் நடத்திவிட்டுப் போகிறது! நன்றாக நடத்தட்டும்— மேலும் தீவிரமாக நடத்தட்டும்!

கருத்து மோதுதல் நமக்குள் ஏற்படலாம். வளர்ச்சிக்கு அறிகுறி அது. நாம் மக்கள்—வனவிலங்குகள் அல்ல. இது நாடு — காடு அல்ல. நாட்டுமுறைதான் தேவை—காட்டு ஆட்சி அல்ல காட்டுமுறையைக் கையாண்டால், அதற்குப் பெயர் ஜனநாயகமாகாது. பாசிசமுறை அது.

மற்ற ஊர்களைப்போல், நமது ஊரிலும் 144 தடையுத்தரவைப் போட்டு, மக்களின் பேச்சுரிமையைக் கொலை செய்து, பற்பல சங்கடங்களை விளைவிக்காமல், ஆழ்ந்த அறிவோடு போலீஸ் அதிகாரிகள் நடந்துகொண்டது, புகழ்ச்சிக்குரியது என்பதோடு மட்டுமல்லாமல், மற்ற ஊர்ப்போலீஸ் அதிகாரிகளுக்கும், இது, தக்கதோர் படிப்பினையாகவும் அமைந்திருக்கிறது. மாகாண அமைச்சர்கள்கூட இதிலிருந்து மதி பெற வேண்டியது முக்கியமாகும்." என்பதாகப் பேசி முடித்தார்.

இந்த வரவேற்பு விழாவில் கலந்துகொள்ளவும், நாடகத்திற்குத் தடைவிதித்த சர்க்காரின் போக்கை மக்களுக்கு உணர்த்தவும், செங்கற்பட்டிலிருந்து தோழர் எம். சின்னையா அவர்கள் தலைமையில் இருநூறுபேர் அணிவகுத்துக் கால் நடையாகக் காஞ்சிபுரம் வந்தது இவ்விழாவினை மேலும் சிறப்புறச் செய்தது. காஞ்சிபுரம் திராவிடர் கழகச் சார்பில் மேற்படி விழாவில் கலந்துகொண்ட செங்கற்பட்டுத் தோழர்களுக்கு நன்றி கூறப்பட்டது.

—

# திராவிட நாடு

காஞ்சிபுரம்] 2—1—49 [ஞாயிறு


# ஆதித்தன் கனவு

## படமல்ல—பாடம்.

—*—

**"தாலமுத்து! நடராஜா!நடராஜா! தாலமுத்து!"** இந்த ஒலி உள்ளத்திலிருந்து பீறிட்டுக்கொண்டு வெளியே கிளம்பிற்று—உடலிலிருந்து பீறிட்டுக்கொண்டு வரும் இரத்தத்தின் பொருள் விளங்கிற்று, போலீசுக்கும், பொதுமக்களுக்கும், ஆனால் இருசாராரில் பலருக்கும், அந்த ஒலியின் பொருள் விளங்கவில்லை.

அவர்கள், எதிர்பார்த்த ஒலி **"ஐயோ! அப்பா! அடடா! ஐயயோ!"** என்பன. வேறு சிலர் எதிர்பார்த்தது, "பாவிகளே! பாதகர்களே!" என்ற சொற்கள். ஆனால், குடந்தையில், பட்டப்பகலில் நடுவீதியில் நிற்கவைத்துத் தடியால் தாக்கப்பட்ட தோழர்களோ, ஐயோ என்றும் அழவில்லை, பாவி என்றும் தூற்றவில்லை, தாலமுத்து! நடராஜா! என்று கூறினர்-இரு காளைகளின் பெயர் கூறி நின்றனர்—காளைகளின் பெயர் மட்டுமா அவை, இலட்சியச் சொற்கள் — முன்னம், ஆச்சாரியார். ஆட்சியின்போது தாய்மொழியைக் காக்க ஆவியை அர்ப்பணித்த அருந்திறல் வீரர்களின் பெயர், வெறும் பெயரா, ஆற்றலூட்டும் சொற்கள்! தியாகப் பாதைக்கு வழிகாட்டிகள்! அடிபட்டபோது, அலறி அழ வேண்டியவர்கள், இந்நாட்டிலேவழக்கமாக, இதுபோன்ற சமயங்களிலே கிளம்பும் முழக்கம்போல, போலீஸ் அட்டூழியம் ஒழிக, என்று ஆர்ப்பரித்திருக்க வேண்டியவர்கள்,கேட்பவரின் நெஞ்சைப் பிளக்கும் ஓர் வசீகரச் சக்தி படைத்த குரலில், தாலமுத்து! நடராஜா! என்று கூறினர்—கூறினரா—அல்ல—அழைத்தனர்—அழைப்புகூட அல்ல—கவனப்படுத்தினர்.

தடியால் தாக்குகிறீர்கள், தமிழ் காக்கும் எம்மை! தகாத செயல் புரிகின்றீர்கள், தருக்கரின் ஆட்சிக்குக் கட்டுப்பட்டு. ஆனால், தாக்குதலால் தகர்ந்துபோவோம் என்று எண்ணாதீர், நாங்கள் அறிவோம், நீவிர் அறிய அதனைக் கூறுகிறோம், முன்னம் நடைபெற்ற மொழிப் போராட்டத்தின்போது இரு இளைஞர்கள் தமது இன்னுயிரையே ஈந்தனர்-அவர் தம் பெயர், தாலமுத்து—நடராஜன், என்பதாகும். அந்த வீரர்கள், எந்த அணிவகுப்பில் இருந்தனரோ, அதில் உள்ளவர்கள் நாங்கள், அவர்கள், எந்த அளவுக்குக் கஷ்ட நஷ்டம் ஏற்கும் உள்ள உரம் கொண்டிருந்தனரோ, அந்த அளவுக்கு உள்ள உரம் கொண்டவர்கள் நாங்கள்—எனவே, அடியுங்கள் ஆளவந்தார்களின் தூதுவர்களே! சாகடியுங்கள்-என்று கூறினர்-கேட்போரின் கல்மனமும் கரையும் விதத்தில்.

தமிழகம், எதிர்பாராத சம்பவம் குடந்தைப் போராட்டம்-நடத்திப் பார்த்துத் தெளிவுபெறும் வரையில் நம்மிலேயே பலருக்கு, நம்பிக்கை ஏற்படவில்லை — எனினும் போர் நடைபெற்றது, நமது நண்பர்கள் தமது, உள்ள உரத்தை, நாட்டுக்கு நன்கு விளக்கிவிட்டனர். வீம்பு பேசிய மாற்றுக் கட்சித் தோழர்களும், ஆச்சரியப் படும் விதத்திலே, நடந்துகொண்டனர்.

திராவிடர் கழகமா!—பேசுவர்—போரிடுவரோ? அடக்குமுறையைத் தாங்க அவர்களால் முடியுமோ? தடையை மீறும் துணிவு உண்டோ? தாக்குதலைத் தாங்கும் திறமை உண்டோ? அவர்கள், 'சர்க்கார் தாசர்கள்' — போர்க்குணம் கொண்டவர்களல்ல!-என்று தான், காங்கிரசிலுள்ள இளைஞர்கள், திராவிடர் கழகத்தாரைப் பற்றிக் கருதிவந்தனர்-அதற்கேற்றபடி கேலியும் பேசினர்.

நாட்டுவிடுதலைப் போரின்போது நாங்கள் பட்ட தடியடி,இவர்களால் படமுடியுமா?-என்று அறைகூவும் விதத்திலே பேசினர்!

அநியாயச் சட்டங்களை மீறி, அடக்குமுறைகளை எதிர்த்து முறியடிக்கும் ஆற்றல் இவர்களுக்கு ஏது? இவர்கள், 'இராஜ பக்தி' பாடுபவர்கள்! சட்டபூஜைக்காரர்கள்!! உரிமைப் போர் புரியும் பண்பும் பயிற்சியும் அற்றவர்கள். உதவாக்கரைகள்!'-என்று கண்டித்துப் பேசினர்.

நாம், சட்டமும் சமாதானமும் நிலைநாட்டப்பட வேண்டும், கிளர்ச்சிகளின் காரணமாக அவை குலைக்கப்படக்கூடாது, அமைதி அழிந்துபடக்கூடாது, வரம்பு கட்டிப் பணிபுரியவேண்டும்; என்று நல்லுரை கூறியபோதெல்லாம், பார்! பார்! சிறைக்கு அஞ்சும் பேர்வழிகளை! அடக்குமுறைக்கு அஞ்சும் ஆற்றலற்றவர்களை! — என்று ஏளனம் செய்தனர்.

பொறுப்புணர்ச்சி காரணமாக நாம், சட்டத்திடம் மதிப்புக்காட்டுகிறோம், பொதுமக்களை வீண் கஷ்டத்துக்கு ஆளாக்கக்கூடாது என்ற காரணத்துக்காக, நாம் அமைதியை ஆதரிக்கிறோம், என்று அறிந்துகொள்ள அவகாசமும் அறிவுத் தெளிவும் அற்றவர்கள், நம்மை நையாண்டி செய்தனர்-படுத்துறங்கும் புலியை, வேலியில் உள்ள ஓணான், கேலியாகப் பார்ப்பது போல!

உரிமைக்காகப், போரிடும்பண்பு, நம்மிடம் கிடையாது என்று கருதியவர்களெல்லாம், குடந்தைப் போராட்டத்தின் மூலம், ஓரளவு தெளிவு பெற்றுவிட்டனர்-உணர்ச்சியற்றவர்களல்ல, அடக்கு முறை கண்டு அஞ்சி ஓடுபவரல்ல, பயந்து விலகுபவருமல்ல, மார்பைக் காட்டுபவர்கள், மறத் தமிழர் நாம், என்பதைக் குடந்தை காட்டிற்று ஒரு நாள், இரு நாளல்ல, ஒரு வார காலத்துக்கு மேலாக!

குடந்தையிலே, விசித்திரமான ஓர் காரணம் காட்டி, 144 வீசினர்—இந்தியை எதிர்த்தும் பேசலாகாது, ஆதரித்துப் பேசக்கூடாது, ஏனெனில், இருசாராரின் பேச்சும் நடைபெற்றுக் கொண்டிருந்தால், கலவரம் ஏற்படுமாம்!

கலவரம் ஏற்பட்டால் தடுக்க, போலீஸ் இருக்கிறது, பேச்சாளர்கள், தூண்டும் முறையிலோ பலாத்

கார முறையிலோ, பேசினுல் அவர்கள்மீது வழக்குத் தொடர வழிவகை இருக்கிறது. எனினும், இந்தியாயமான பாதையை மறந்து, 144 போட்டனர்.

**144**! நாட்டிலே, அனைவருக்கும் இந்தச் செக்ஷன், மிகமிகநன்ருகத் தெரியும், இதனைக் கண்டித்துப் பேசிடாத காங்கிரஸ் தலைவர் இருக்கவே முடியாது.

வாய்ப்பூட்டுச் சட்டம் என்றனர் இதனை—இன்னும் ஓர் வாய் வல்லுனர், இதனை, நாக்கறுப்புச் சட்டம் என்ருர், ஏகாதிபத்யம் இந்தச் சட்டத்தின் மூலம், தேசியவாதிகளின் நாக்கையும், பொதுமக்களின் செவியையும் அறுத்துவிடுகிறது, என்று ஆர்ப்பரித்தார் இன்னெருவர்.

**144**! மிக மிக அதிகமான அளவிலே மீறப்பட்டு மீறப்பட்டு மதிப்பிழந்த முறை! இதனை மீருத பெருந்தலைவர் இல்லை! பெரிய நகரமெங்கும், இது மீறப்பட்டிருக்கிறது.

**144**! இதனைக் கண்டித்துப் பேசாத கண்ணியர்கள் இல்லை! பொதுமக்கள், இதனை எள்ளி நகையாடினர், பல ஆண்டுகளாக!

பாரய்யா வீராதி வீரனை! அவனிடம் போலீஸ் இருக்கிறது, இராணுவம் இருக்கிறது, தடியிருக்கிறது துப்பாக்கி—ரவை இருக்கிறது, அலிபுரம் இருக்கிறது அந்தமான் இருக்கிறது, இவ்வளவு இருந்தும், இந்தப் பிரிட்டிஷ் சிங்கம், நமது, தேசபக்தரின் பேச்சைக் கேட்டால், கிடுகிடுவென்று நடுங்குகிறது. இடிகேட்ட நாகமாகிறது—பேசாதே! பேசாதே!—என்று பீதி கொண்டு தடைபோடுகிறது—என்று கேலி பேசினர், இந்த 144-வது செக்ஷனைப் பற்றி.

என் நாட்டில், என் மக்களுக்கு, என் மனதில்பட்டதை எடுத்துச் சொல்லுவதைத் தடுக்கும் வல்லமை, யாருக்கும் இல்லை—பிரிட்டிஷ் சிங்கமானுலும்சரி, வெள்ளைக் கரடியானுலும்சரி, என் பேச்சுரிமையைத் தடுக்கமுடியாது. பேச்சுரிமை பிறப்புரிமை! நாமார்க்கும் குடியல்லோம்—நமனை அஞ்சோம் என்ருர் நாயனுர்—நாமா, இந்தச் சீமை ஓநாய்களுக்கு அஞ்சுவோம்—144-க்கு அடங்குவோம், என்று வீரம் சொட்டச் சொட்டப் பேசினர், பல ஊர்களில்.

சுதந்திரம் கிடைத்தால், இந்த நாக்கறுப்புத்திட்டம் இராதுஎன்று வாக்களித்தனர். பேச்சுரிமை அனைவருக்கும் உண்டு என்றனர். அந்தக் குணளர்கள்தான் ஆட்சி செய்கிருர்கள், நமக்கோ,

தூத்துக்குடி
கோயில்பட்டி
மதுரை
திருவாரூர்
திருக்கோயிலூர்
நன்னிலம்
கொடவாசல்
பேரளம்
விழுப்புரம்
வேலூர்
கும்பகோணம்
கல்லக்குறிச்சி
இங்கெல்லாம் 144!!

பட்டிகண்டு, வெட்கப்பட வேண்டாமா, பரங்கி இதைச் செய்த போது, பாதாளத்திலிருந்து பதங்களைப் பெயர்த்தெடுத்து அண்டம் சென்று முட்ட விடுவது போல, ஆர்ப்பரித்துப் பேசிய, அருமைக் காங்கிரஸ் நண்பர்கள்.

இவ்வளவுக்கும், இலட்சம் பேர் கூடும் மாநாடாக இருந்தால்கூட, இந்துவிலோ ஒருவரி இராது, மற்றவைகளிலேயும் இருட்டடிப்புதான் இருக்கும்—அது இல்லாத போது, 'கயிறுதிரித்தல்! இருக்கும். அவ்வளவு கட்டுப்பாடாக, நமது கழகப் பிரசாரத்தைப் பொதுமக்களின் கண்களுக்குத்தெரியவிடாதபடி தடுக்கும், சாதனங்கள், உள்ளன, காங்கிரசிடம். ரேடியோ இருக்கிறது! M. L. A-க்கள் உள்ளனர்! தியாகிகள் உள்ளனர்! நாட்டிலே, காங்கிரஸ் தவிர வேறு ஒரு கட்சியே கிடையாது, என்று மக்கள் நம்பும் விதமாகப் பிரசாரம் செய்ய!

எனினும், திராவிடர்கழகக் கூட்டத்துக்கு 144, இவ்வளவு நகர்களில்—பட்டி, வளர்ந்தபடி இருக்கிறது!! ஏன் இந்தப் பீதி ஏற்பட்டது? கலக்கம் வரக் காரணம் என்ன? இருட்டடிப்பைப் பிய்த்துத் தள்ளிவிட்டு, திராவிடர் கழகக் கோட்பாடுகள் எங்கும் பரவியபடி உள்ளன.

அளவரிசியைக் காணும் போது, ஆடைக்கடையைப் பார்க்கும் போது, பல்லாங்குழி போலுள்ள பாதையிலே செல்லும் போது, பாலமற்ற ஆறுகளை, பாதையற்ற கிராமங்களை, பள்ளிகளற்ற இடங்களை, பள்ளிகளில் வாழ்வின் சுவை காண முடியாத ஆசிரியர்களைக் காணும்போது, முதலாளியின் முடுக்கு, மிராசுதாரனின் வாழ்வு, ஆலையில் வேகும் பாட்டாளியின் பரிதாபம், உழவனின் அல்லல், ஆகியவைகளைப் பார்க்கும்போது, சட்டசபையிலே சாய்ந்தபடி தூங்கும் சற்குணர்களையும், விழித்தெழுந்ததும் வேக வேகமாகச் சென்று, பெர்மிட்டுக்குப் பெருந்தவம் இருக்கும் போக்கையும் பார்க்கும் போது—சுருங்கக் கூறினுல், இன்றைய ஆட்சியாளர்களின் போக்கின் விளைவுகளான அல்லல்களை, அலங்கோலங்களைக் காணும் போதெல்லாம், காண்பவர் மனக்கண்முன், ஒரு வெண்தாடிக்கிழவர் நிற்கிருர், அவர்களின் செவியிலே, திராவிடர்கழகப் பேச்சுக்குடைந்து கொண்டு செல்கிறது!

திராவிடர்கழகக் கூட்டமென்ருல், திரண்டுவிடுகின்றனர்—மாநாடுகள், திருவிழாக்களாகின்றன! திகைப்பு உண்டாகிறது, ஆளவந்தார்களுக்கு!

எங்கிருந்து கிளம்பிற்று இந்தச் சக்தி? எப்படித் திரட்டமுடிந்தது, பிரசாரசாதன பலமற்ற இவர்களால்! எவ்வளவோ எதிர்ப்புகள் உள்ளனவே, எங்ஙனம், அவ்வளவையும் மீறி, இவர்கள், மக்களின் நெஞ்சிலே, தங்கள் கொள்கைக்கு இடம் பெற்றுவிட முடிந்தது? எண்ணினர், ஏக்கத்துடன்! எதிர்ப்பிரசாரம் செய்தும் பார்த்தனர் புது ஊக்கத்துடன், பயன் ஏதும் காணுததால், பழயமுறையே சிறந்தது என்று எண்ணினர், வீசினர் 144! எங்கும் 144!! அங்கே, இங்கே எங்கெங்கே திராவிடர்கழகக் கூட்டம் நடைபெறுகின்றன என்று பார்த்துப் பார்த்து வீசுகின்றனர், நாக்கறுப்புச் சட்டத்தை!

சிறையில் தள்ளுவோம்!—என்று மிரட்டிப் பார்த்தனர்—சென்ற ஆண்டு வீரையில் அவர்கள் சிந்து அதுதான்.

ஓராண்டு முடிவதற்குள், புதுத் தெளிவு பெற்றனர், சிறைக்கஞ்சாதாரே திராவிடர்கழகம்—சிமான்

களும் சிங்கார புருஷர்களும் சேல மாகிவிட்டனர், இப்போது உள்ள வர்களோ, இலட்சிய வெற்றிக்காக, எந்த விலையும் கொடுக்கக் கூடிய வர்கள்---இவர்களைச் சிறையிலிடு வது என்றால், திறந்தகதவை மூட வும் நேரமிராது, கட்டியபடி இருக்க வேண்டும் புதுப்புதுச் சிறைகளை-- சிறைச்சாலைகள் திராவிடர்கழக அறச்சாலைகளாகிவிடும், என்பதைக் கண்டனர் — ஒற்றர்கள் தந்த 'சேதி' அவர்களுக்குப் புதியதோர்பீதியை உண்டாக்கி விட்டது. மீண்டும் யோசிக்கலாயினர்! சிறை,போதாது சிறைப்படுத்திப் பயன்காண முடி யாது, சிங்கார வாழ்வினர் என்று எண்ணினோம் இவர்களை, இவர் களோ நாட்டைக்காக்க வீட்டைத் துறந்துவிட்ட வீரர்களாகிவிட்ட னர்! இவர்களை அடக்க, வேறுவழி காணவேண்டும், என்று எண்ணி னர்--பழைய அடக்குமுறை, அசட் டுச் சிரிப்புடன், ஆளவந்தார்களின் முன்புவந்து நின்றது--"அடியேனை ஏவுக!" என்றது --- சென்றுவா! வெற்றியுடன் திரும்பிவா---என்று ஆசிகூறி அனுப்பினர், அது, குடந் தையிலே, ஆதித்த உருவில் வந்து நின்றது--- ஆற்றலைக்காட்டி, ஓய்ந்தது.

குடந்தையில் நாம் துவக்கிய உரிமைப் போராட்டத்தை ஒடுக் கும், பொறுப்பை, ஏற்றுக் கொண் டவர்--சர்க்கார் தரப்பில்--போலீஸ் உதவி சூப்பரின்டு, தோழர் **ஆதித்தன்** அவர்கள்! கருவி--விசையல்ல! எனினும் அவர் பெயர்மிகமிகப் பிர பல்யமடைந்துவிட்டது. மறைந்து கிடந்த சக்தியைத் திரட்டிக் கொண்டு கிளம்பினர், மகத்தான பொறுப்புணர்ச்சியுடன் — அவர் அறிவார் ஆனால் ஆட்சியாளர்களி டம் கூறமுடியாது அவரால்-அவர் நன்கு அறிவார், சர்க்கார், தேர்ந் தெடுத்திருக்கும், இரண்டாவது கருவியான, அடக்குமுறை, எந்த அளவுக்குப் பயன் தரும், என்ற சூட்சமத்தை!

தடையைமீறிக் குடந்தையில், தாறுமாறான முறையிலே, காரியங் களைச்செய்ய முயல்வர் திராவிட கழகத்தார் — உடனே நாம், கல வரம் ஏற்பட்டுவிட்டது, அமைதி அழிகிறது, பலாத்காரம்தலைதூக்கு கிறது, என்று கூறிவிட்டு, இருத யத்தை ஒரு இரண்டு நாளைக்கு 'சும்மா கிட' என்று கூறி அடக்கி விட்டு, இலட்சிய வாதிகளை அடக்கு முறைக்கு ஆளாக்கினால், காட்டுக் கூச்சல் அதிகமாகும், கழகச்செயல் கள் கட்டுக்குமீறிச் செல்லும்,பிறகு சுலபத்திலே, அடக்கி விடலாம் என்று எண்ணினர் — பலாத்கார முறை தலைவிரித்தாடிய கிளர்ச்சி களைமட்டுமே கண்டு பழக்கப்பட்ட, அந்தப்போலீஸ் அதிகாரி; இதைத் தான் நாம், **ஆதித்தன் கனவு** என் கிறோம்.

உரிமைப் போர் துவக்கப்படுவ தற்கு முன்னாள் இரவு, ஆதித்தன் கனவு காணாதிருந்திருக்கமுடியாது

பெருந்திரளைக் காண்கிறார்! மூலைக்கு மூலை அவர்கள் ஓடக்காண் கிறார்! காட்டுக்கூச்சலைக் கேட்கிறார்! போலீஸ் ஒழிக, என்று தூற்றுவது கேட்கிறது! போலீஸ் விரட்டுகிறது பொதுமக்களை! பொதுமக்கள்கலைய மறுக்கிறார்கள்! வேட்டை ஆடுகின் றனர் போலீசார்! விர் விர் என்று கற்கள் பறக்கின்றன போலிசை நோக்கி! அதிகாரிகள்மீது வீழ்கின் றன! புன்னகை தவழ்கிறது அவர் முகத்தில்! ஐந்தே நிமிஷம் அவகா சம் தருகிறோம், கலைந்து போகா விட்டால் துப்பாக்கிப் பிரயோகம் என்கிறார். கலையவில்லை, மக்கள்! துப்பாக்கி பேசுகிறது! பிணங்கள் கீழே!! மெடல்கள் மார்பிலே!! — இப்படி ஓர் கனவு.

மறுதினமோ,அவர்கண்டகாட்சி, வேறு! அறப்போரின் முழு இலட் சணப்படி நடக்கிறது கிளர்ச்சி.

**இந்தி ஒழிக! — தமிழ் வாழ்க!** என்று முழக்கமிட்டவண்ணம்செல் கின்றனர் பத்துத் தொண்டர்கள்- ஆர்ப்பரிப்பு இன்றி, அமைதியாக. போலீஸ் தடுக்கிறது-நிற்கிறார்கள். தடை உண்டு அறிவீரா, என்று கேட்கின்றனர், அறிந்தே வந்தோம் என்கின்றனர் — அடிப்போம் என் கின்றனர், உங்கள் இஷ்டம் என் கின்றனர் — அடிக்கின்றனர் தடி கொண்டு, தாலமுத்து, நடராஜா, என்று அழைக்கின்றனர் —அதிகா ரிகள் திகைக்கின்றனர்!

எதிர்பார்த்தது நடக்கவில்லையே அமளியை எதிர்பார்த்தோம் இவர் கள் அறப்போரன்றோ நடத்துகின் றனர், கட்டுக்குலையும், பிறகு சுட் டுத்தள்ளலாம் என்று எதிர்பார்த் தோம், இவர்களோ, அமைதியை இழக்க மறுக்கிறார்கள், ஈதென்ன விந்தை என்று எண்ணித் திகைத் தனர்.

உண்மையிலேயே, பொது மக்க ளையும், கிளர்ச்சியில் ஈடுபடும் தோழர்களையும், எவ்வளவு அதிக மாகவும், விரைவிலும், ஆத்திர மூட்டமுடியுமோ அவ்வளவையும் துவக்கத்திலேயே செய்துவிட்ட னர், அதிகாரிகள்.

முன்னிரவே, பெரியாரைக்கைது செய்தனர் — குடந்தைத் தலைவர் கள் நீலமேகம், பொன்னுசாமி, முத்துதனபால், S. K. சாமி ஆகிய யோரைச் சிறையில் தள்ளினர் — நகரெங்கும் போலீஸ் மயமாக்கிக் காட்டினர்—ஆத்திர மூட்டக்கூடிய இவ்வளவு சம்பவங்கள் நேரிட்டு விட்டதால், மறுதினம், அமைதி இராது, கட்டுப்பாடு இராது,அறப் போருக்குப்பதில் மிருகத்தனம் தோன்றிவிடும், தோன்றினால், தீர்த் துக்கட்டிவிடலாம், என்று கனவு கண்டனர்.

ஆனால் நமது அருமைத்தோழர் களின் அமைதி, அவர்களைத் திகைக்கச்செய்துவிட்டது—அறப் போர் வீரர்கள் காட்டிய உயர் பண்பு கண்டு உளம் பூரிக்கிறோம்- புதியதோர் நம்பிக்கை கொள்கி றோம் — அணிவகுப்பிலே, இனிப், பீதி கிளப்ப, கலாம் விளைவிக்கமுடி யாது என்பதை அந்தச் சிலர்கள் நன்கு விளக்கிவிட்டனர், செயலால். ஒருகடுமையான பார்வை உண்டா? சுடுசொல், ஒன்று கூறினரா? ஆர்ப் பரிப்பு உண்டா? இல்லை! இல்லை! அதிகாரிகள் நன்கு அறிவர் இதனை. பல ஆயிரக்கணக்கான மக்கள் — இடையே இப்பதின்மர் — இவர் களைச்சூழ்ந்து போலீஸ் — அவர் களிடமெல்லாம் தடி — எனினும் ஒருசிறு ஆத்திர அறிகுறியும் எழ வில்லை! கேள்விகளுக்குப், பணி வான, ஆனால் உறுதி குலையாத பதி லளித்தனர்! மிரட்டல்களின்போது புன்சிரிப்பைக் காட்டினர்! அடித்த போது இரத்தத்தைச் சொட்ட விட்டனர்! நாம் பெருமைப்படுகி றோம், நமது வீரர்கள் காட்டிய பொறுமை உணர்ச்சியை, பொறுப் புணர்ச்சியைக் கண்டு!

இத்தகு, போராட்டங்கள் பல நடாத்திப் பழக்கப்பட்டவர் களல்ல நாம்! தடியடி பெற்றனர் நமது தோழர்கள்—கலங்கினர் இல்லை, கதறினர் இல்லை, காட்டுப் போக்குக்கொள்ளவில்லை, கடமைக்

குக் கிடைக்கும் பரிசு, உரிமைக்காகக் கொட்டும் குருதி என்று எண்ணினர் — ஏறுகள் வாழ்க! இலட்சிய வீரர்கள் நீடூழி வாழ்க!!

வீதியிலே வீழ்ந்தனர் — அடிபட்டு! ஆஸ்பத்திரியிலே கிடந்தனர், பலமான அடிபட்டு, ஊருக்கு வெளியே இருபது மைல் தொலைவிலே, கொண்டுபோய்விட்டனர், நாதியற்றவர்கள் போல்! இவ்வளவுக்கும், ஒரு சிறு சிற்றக்குறி காட்டினரில்லை. அமைதி நிலவிய வண்ணம் இருந்தது! அறம் ஆட்சி செய்தது! விலா முறிந்தால் என்ன, அடிப்பவர் யாராக இருந்தால்தான் என்ன, விடுதலைப் போரிலே இவை நடைபெறத்தானே வேண்டும்— என்று எண்ணிக், கடமையைச் செய்தனர், நம் காளைகள்!

அமைதி குலையாதது கண்ட அதிகாரிகள், பொதுமக்களைக் கண்டபடி தாக்கித் துரத்தினால், பீதிகொண்ட மக்கள், பாதிமதியுடன் ஏதேனும் சிறு செயல் புரிவர், பிறகு நமது வேலை எளிதிலே முடியும் என்று எண்ணினர் — பொது மக்களுக்குத் தடியடி! ஓடினர் ஓடினர், இங்கும் அங்கும்! ஓடும்போது வீழ்ந்தனர் சிலர்—வீழ்ந்தவர் மீது வீழ்ந்தனர் சிலர்! பாதை ஓரத்தில் பதுங்கினர்—சிறு சந்துகளில் நுழைந்தனர். கடையை மூடினர் சிலர்—காய்க்கறிக் கூடையைக் கவிழ்ந்துக் கொண்டனர் சிலர், ஓடும்போது, பொதுமக்களின் மனதிலே, தோன்றிய எண்ணங்கள் யாவை? தடியடி தர்பார் நடக்கிறது, தர்மராஜ்யத்தில்! வேட்டையாடுகிறார்கள் பொதுமக்களை, ஓட்டுவேட்டை முடிந்துவிட்டதால்! அடக்கு முறையை அவிழ்த்துவிட்டனர், ஆங்கிலரைக் கண்டித்தவர்கள்!—என்று எண்ணாதவர் இருக்க முடியுமா? பேயாட்டம்—வெறியாட்டம்—வீணாட்டம்—ஆர்ப்பாட்டம்—என்று, பலப்பல கூறினர், பதைத்தனர் — சிலர், அடிபடும் தொண்டர்களைக் கண்டு கண்ணீரும் சொரிந்தனர். எனினும் அமைதி குலையவில்லை. நமது கழகத் தோழர்கள், பொதுமக்களைப் பணிவுடன் வேண்டிக்கொண்டனர், அமைதியை நிலைநாட்டினர்.

“பாழாய்ப்போன பொதுமக்களும்” இவ்விதம் இருக்கின்றனரே, என்ன செய்வது, என்ற ஏக்கம் மிகுந்துவிட்டது அதிகாரிகளுக்கு. மீண்டும் யோசித்தனர்—மற்றோர் முறை தோன்றிற்று.

திராவிடர் கழகத்தார், மிகவும் ரோஷ உணர்ச்சிக்காரர்கள்—பேச்சில் வல்லவர்கள் — அவர்கள் எவ்வளவு கஷ்டத்தையும் தாங்கிக் கொள்வர், ஆனால் ஒரு சிறு இழிசொல் கேட்கவும் இசையார், அவர்களின் இயல்பு அதுதானே, எனவே அவர்களை இழிமொழி கூறி ஏசுவோம், ஏசிடின் அவர்கள் எதிர்த்துப் பேசுவர், பேசிடின் நமக்கு நல்ல வாய்ப்புக் கிடைக்கும், என்று எண்ணினர்— திட்டப்படி செய்தும் பார்த்தனர். அறப்போர் வீரர்களை ஆபாச மொழிகளால் தூற்றினர்! வீரர்களை வெறியர்கள் என்றனர்! தாய்மொழி காத்திடுபவர்களை தடியா, மடையா என்றனர்! கடமையைச் செய்து நின்றவர்களைக் கழுதைகளா என்று கடிந்துரைத்தனர்! மாலைகளைப் பிய்த்து எறிந்தனர்—சட்டைகளைப் பறித்தனர்—ஆனால் நமது தோழர்களோ, ஆங்கிலப் பெருங்கவி ஒருவர் கூறியதுபோல **“எதையுந் தாங்க இந்த இதயம் உண்டு”** என்று, இருந்தனர்.

**தூற்றினோம், துடித்தெழவில்லை! தாக்கினோம், தாறுமாறான நிலைபெறவில்லை! துரத்துகிறோம் அடித்து, பீதி கொள்ளவில்லை! ஓயவில்லை—கலங்கவில்லை—இரத்தம் சிந்துகின்றனர்—எத்தனை நாளைக்கு நாம் இந்த முறையைக் கொள்ள முடியும்—எத்தனை நாளைக்குத்தான், இதயத்தை இரும்பு நிலையில் வைத்திருக்க முடியும், எத்தனை நாளைக்குத்தான் கண்ணீரை மறைக்க முடியும், ஒரு சுடுசொல் பேசக்கூடாதா இந்தப் பயல்கள், ஒரு கெடுமதியாளனாவது கிளம்பிக் கலாம் விளைவிக்கக் கூடாதா, பிறகு நெஞ்சிலே பயமின்றி, நமது காரியத்தைச் செய்து முடிக்கலாமே! இப்போதோ, அந்த இளைஞர்களின் பார்வை, நமது இதயத்தைத் துளைக்கும் ஈட்டியாகிறதே, அவர்கள் காட்டும் அமைதி நமது உறுதியைக் குலைக்கிறதே, அவர்களின் தியாக உணர்ச்சி, நமக்குத் திகைப்பை உண்டாக்கிவிடுகிறதே, எப்படி, இந்தக் கஷ்டமான நிலையிலிருந்து விடுபடுவது, என்று விசாரத்திலாழ்ந்தனர், வீராவேசமாகக்கிளம்பிய அதிகாரிகள். நாளுக்குநாள் நகர் பேசுகிறது, அதிகமாக, அதிகமாக—நாடு கவனிக்கிறது—கட்டுப்பாடு மிகுந்த அறப்போரின் மாண்பு பற்றி. இவ்வளவுக்கும், முன்னின்று நடத்த வேண்டிய முக்கியமான தலைவர்கள் சிறையில்! என் செய்வர்! இனி எம்மால் இயலாது, என்றுகூறிவிட்டனர்-சர்க்காரிடமா? அல்ல!-கூறமுடியாதல்லவா!!-பொதுமக்களிடமா? ஆமாம்! எப்போது? பேச்சின் மூலம் அல்ல, செயலின் மூலம். தடியடி தர்பாரை நிறுத்திக்கொண்டனர்!! அந்தமுறை பலன் தரவில்லை, இயக்க வேகத்தைக் குறைக்கவில்லை, என்பதை உணர்ந்தனர்— தடியடி தர்பாரைக் கைவிட்டனர். உரிமைப்போர் வழக்கப்படி நடந்து வந்தது, ஆனால், தடியடி தர்பார்நின்றுவிட்டது! தயாளர்களாகிவிட்டனர்!! ஏன்? நமது தோழர்கள், காட்டிய வீரமும் அமைதியும், அவ்வளவு மேலான முறையிலே அமைந்திருந்தது. ஒரு நாள்-இரண்டு நாள்—மூன்று நான்கு நாட்கள், உரிமைப் போர் நடந்து கொண்டே இருக்கிறது, ‘உக்கிரசேனர்கள்’ சாந்தமூர்த்திகளாகிவிட்டனர், தடியடி, இல்லை-சொல்லடியும் இல்லை! புயலை எதிர்த்துச் சென்றனர்-புயல் ஓய்ந்தது-ஓயுமட்டும் சளைக்காது சென்றனர், நமது தோழர்கள்!!**

**144!!-மீறுவோர் தண்டிக்கப்படுவர்-அதுதான் சட்டம்!-தண்டனையில், வழக்கமான தண்டனை, சிறை! விசித்திர சித்தர்களின் ஆட்சியிலே, ஜெயிலிலே இடமில்லை, எனவே, 144 வது சட்டத்தை மீறினவர்களுக்குச் சிறைத் தண்டனை இல்லை! அதற்குப் பதில், வேறு கொடுமையான தண்டனை தந்து வந்தனர் தடியடி-பிறகு, அதனையும் கைவிட்டனர்! 144 அமுலில் இருக்கிறது, ஆனால் உரிமைப் போர் வீரர்கள் ஒவ்வோர் நாளும் மீறுகின்றனர்-எனினும், சட்டம் சக்தியிழந்து கிடப்பது போல, அவர்களுக்கு தண்டனை இல்லை!**

**என்னய்யா செய்கிறது 144?-மக்கள் கேட்கின்றனர்.**

**அதோ மீறுகிறார்களே-தெரியவில்லையா?-என்றும் மக்கள் கேட்கின்றனர்.**

**144 ஐ மீறும் உரிமைப் போர் வீரர்களையும் மக்கள் காண்கின்றனர் அவர்களை ஏதும் செய்யாமல், சட்டத்தின் காவலர்கள் நிற்கவும் காண்கின்றனர். என்ன எண்ணுவர்! 144 தோற்றுவிட்டது! மீறப்படுகிறது! எனினும் மீறுவோர் மீது, எவ்வித**

நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளாமல் அதிகாரிகள் உள்ளனர்-துவக்க முதல் இவ்விதம் இருந்தனரா? இல்லை-அவசர அவசரமாக வேலை செய்துபார்த்தனர்-சிலரைச் சிறைப்படுத்தினர்-அதோ தோழியர் மணி சிறையில்-நண்பர் நடராசன் காவலில்-இந்த முறையைப் பிறகு கைவிட்டனர்-இப்போது ஏதும் செய்யாதுள்ளனர், ஏனெனில், சட்டத்தை மீறுபவர்களைத் தண்டிக்க, சிறையும் தடியடியும், இருமுறைகள் இரண்டும் கையாண்டு பார்த்துத் தோற்றுவிட்டனர்-வேறு ஓர் முறையும் இல்லை, ஆகவே 144வது செக்ஷன், தங்கள் கண் முன்பாகவே மீறப்படுவதைக் கண்டும், வாளாவிருக்கின்றனர்! இதுதானே, பொது மக்கள் தரும் தீர்ப்பாக இருக்க முடியும்! வேறென்ன பொருள் கூற முடியும், வீராவேசத்தை அடக்கிக் கொண்டது கண்டு! திராவிடர்கழக நிர்வாகக் கமிட்டி, இந்தப் புதியநிலை கண்டு மகிழ்ச்சியடைந்து, அடக்குமுறை ஈட்டியின் கூர் மழுங்கும் அளவுக்கு அறப்போர் நடத்தி வெற்றி கண்டவீரர்களைப்பாராட்டி 30ந் தேதிவரை உரிமைப் போர் நடாத்தி,முடித்துக் கொள்வதென்று தீர்மானித்தது.

குடந்தைப் போராட்டம் நமது கழகத்துக்கு, உள்ள தாங்கும் சக்திக்கு ஓர் எடுத்துக்காட்டு. அமைதிக்கும் கட்டுபாட்டுக்கும் உள்ள உண்மையான பலத்தை அறிவிக்கும் மகத்தான பாடம். திராவிடர்கழகம் எத்தகைய அணிவகுப்பு என்பதை ஆளவந்தார்களுக்குத் தெரிவிக்கும் சம்பவம்,குடந்தைப்போராட்டம்ஓர் பயிற்சிக்கூடம்! நமது வீரர்களுக்கு நிலாச்சோறு அளவுதான் இது, என்றபோதிலும், நாம், கொண்டுள்ள உள்ள உறுதியை ஆளவந்தவர்களுக்கு அறிவிக்கும் அற்புத நிகழ்ச்சி. கருத்துள்ளோர் காணட்டும், இதனுள் புதைந்துள்ள பாடத்தை. ஆளவந்தார்களின் அடக்குமுறைத் திட்டம் அறப்போரை அழித்துவிடாது என்பதையும், 'ஆதித்தன் கனவு' பலிக்காது போனது போலவே, ஆளவந்தார்கள் தயாரிக்கும் எந்தப் புதுவித அடக்குமுறையும் வெற்றி தராது என்பதையும், காட்டும் மகத்தான பாடசாலையாயிற்று குடந்தை! வாழ்க, உரிமைப் போர்வீரர்கள்! வளர்க அவர்தம் தொகை! வீழ்க அடக்குமுறை! வெல்க திராவிடம்! ✽

7-ம் பக்கத் தொடர்ச்சி

இவர்களின் உதவி அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு, மிகமிக அவசியமாகத்தேவைப்படுகிறது. தொந்தரவு செய்யும் குழந்தைகளை, தாலாட்டுப் பாடி, தூங்கச் செய்யும் தாய்போல, இந்தத் தத்துவ போதகர்கள், தங்கள் தத்துவ போதனையால், மக்களை சொற்களுக்கு மயங்க வைத்து, சுக வாழ்வு தேடும் பணியில் மந்த நிலையை ஏற்படுத்துகிறார்கள். இதன் பயனாக, தங்கள் தேவைகளைத் தெரிந்து கொள்ள முடியாமலும், தெரிந்துகொண்டாலும் அவைகளின் இன்றியமையாமையைப் புரிந்து கொள்ள முடியாமலும், புரிந்து கொண்டாலும் அவைகளைப் பெறுவதற்கான மார்க்கத்தை அறிந்து கொள்வதற்கு முடியாமலும், அறிந்துகொண்டாலும் அதனைக் கடைப்பிடித்து வெற்றிகொள்ளமுடியாமலும், வெற்றி கொண்டாலும் அதன் விளைவாக ஏற்படும் வாழ்வு முடிந்தது என்று சொல்வதற்கில்லையே என்ற கவலையாலும், 'எப்படியோ இருப்போம்-என்னை ஆளும் ஈசன் செயல் இது' என்ற முடிந்த ஞானிகளாக, ஆரம்பத்திலேயே, தங்கள் இழிந்த நிலைக்கு இலக்கணம் கற்பித்துக்கொண்டு ஆறுதல் பெற்று விடுகிறார்கள். பெரும் பெரும் தத்துவ போதகர்கள் மட்டும் புரிந்து கொண்டதாகப் பேசப்படும் வேதாந்த பொருளை, சிகாகோ நகரில் சாமி விவேகானந்தர் ஆற்றிய விரிவுரையின் சாரத்தை, அரங்கு தாங்கி செல்லும் புகைவண்டியில், காலணாவிற்குக் கையேந்திநிற்கும் சோறியனும் அல்லவோ, கேட்போர் மனதில் மயக்கம் தோன்ற, கவிரூபத்தில் காட்டி விடுகிறான். மாயாவாதத்தின் மதிப்பு—வேதாந்தத்தின் விலை—காலணாவிற்குள்ளாக வன்றோ அடங்கிவிடுகிறது, அந்தச் சோறியனிடத்தில்! அங்கு புகை வண்டியில் போகும் பலருக்கும், சில நிமிஷமாவது, சோறியன், ஞானாசிரியனாகவன்றோ இருக்கிறான். இத்தகு 'மெய்ஞான'த்தைத் தெரிந்து கொள்ளக் கல்லூரி எதற்கு? அதற்காக ஆயிரக்கணக்கில் பணத்தைப் பாழ்செய்வதுதானெதற்கு? காலணா செலவில் அன்றோ, கட்டைக் கடைத்தேறும் மார்க்கத்தைக்காட்டுகிறான் சோறியன்! கார் தேவை இல்லை—கவர்ச்சிமிக்க ஆடை அணி பலவும் தேவை இல்லை — மாதாமாதம் பைநிறைய பணமும் தேவை இல்லை. இவ்வளவு ஆடம்பரத்திலிருப்போர், உண்மை வேதாந்திகளாக வேண்டுமானால், சோறியனுக்கு பாதபூஜை செய்து பலகாலம் அவன் சீடர்களாக மாறி, அவன் காட்டும் பாதையைக் கேட்டுக் கேட்டுப் பழகினால்தான், இவர்கள் ஆடம்பரத்தில் கொஞ்சமாவது குறைய வழி பிறக்கும். (தொடரும்)


சி. என். ஏ. எழுதிய

"வாழ்க்கைப் புயல்"

விலை: 0—12—0

டிம்மி அளவில் 56 பக்கங்கள் கொண்டது

கிடைக்கும் இடம்:—

பரிமளம் பதிப்பகம்

54, வரகுவாசல் தெரு

காஞ்சிபுரம்.

உதவி நிதி நாடகம்

"சந்திர மோகன்"

பெரியார் முன்னிலையில்

23—1—49-ல் ஈரோட்டில்

ஸ்டார் டாக்கீசில்

நடைபெறும்

இதில் வசூலாகும் தொகை பட்டக்காரர் உயர்நிலைப்பள்ளிக்கூடமும் அர்ச்சுனன் உணவு விடுதியும் அமைப்பதற்கு அளிக்கப்படும்.

## படக்காட்சிகளில் பரமன்

4-ம் பக்கத் தொடர்ச்சி

கள், தங்களால் செய்யப்படும் சீர்திருத்தங்களுக்குத் தடையாகவும், ஆராய்ந்து பார்க்கவேண்டியனவாகவும் உள்ளபல அடிப்படைக்காரணங்களையும்நன்கு எண்ணிப்பார்க்கவேண்டும். அதாவது, விருப்புவெறுப்பும்—நினைப்பு மறப்பும் அற்றதாகப்பேசப்படும் ஒரு கடவுள், விருப்பு வெறுப்பும்—நினைப்பு மறப்பும் உள்ள மக்களை (உலகை) எப்படிப் படைத்தார்? ஏன் படைத்தார்? குற்றமற்றகுணகுன்றாக உள்ள கடவுள், குற்றம்புரியும் உயிர்களை எப்படிப்படைத்தது? குற்றம் புரியும் உயிர்களை ஒறுக்கும் கடவுள், அக்குற்றங்களையும், அவற்றைச்செய்வோரையும் ஏன் படைத்தார்? நல்லதையே விரும்புங்கடவுள் தீயதை ஏன் படைத்தார்? நோயையும் அது தீர்வதற்குரிய மருந்தையும் உண்டாக்கிய கடவுள், அந்நோய் தீர்வதற்குத் தன்னையேவணங்கவேண்டுமென்று சொன்னால், அத்தகைய கடவுளையும் அதன் கௌரவத்தையும் காப்பாற்றித்தான் ஆகவேண்டுமா? கடவுளால் உண்டாக்கப்பட்ட ஒருவன், தன்னை உண்டாக்கியவர் கடவுள்தான் என்பதை அறியமுடியவில்லை என்றால், அது அவனுடைய குற்றமா? அன்றி அந்தக் கடவுளுடைய குற்றமா? தன்னை அறியமுடியாத அறிவைக்கொடுத்து, ஒருவனை அந்தக் கடவுள் படைப்பதும், பின்னர், அவன், தன்னை அறிந்து வழிபடவில்லை என்ற குற்றத்தை அவன் மீது சுமத்தி அவனைத் தண்டிப்பதும் அந்தக்கடவுளின் அருள் கலந்த செயலா? மக்களுக்கு அறிவைக் கொடுப்பது கடவுள் என்றால், அறிவில்லாமல் செய்வதும் அந்தக் கடவுள்தானே! அங்ஙனமாயின், ஒருவன்தன் அறியாமையாற் செய்யுங் குற்றம் அந்தக்கடவுளைத்தானே சாரும்! உலகில், ஒருவன் செய்யும் குற்றத்திற்குத் தகுந்த தண்டனைஉலகிலேயே கிடைக்கும்போது, அதற்கென வேறு ஒரு உலகம் 'நரகம்' என்ற பெயரோடு தனியாக இருப்பதாகச் சொல்லப்படுவதன் பொருள் என்ன? கடவுள் செயலால் செய்யப்படும் ஒரு குற்றத்தை உலகில்உள்ள ஒருவன் தண்டித்தால், அது கடவுள் ஆணையை மீறியதாகாதா? இன்பதுன்பங்கள் ஆகிய இரண்டையும் நுகர்வது இவ்வுலகத்தில் என்றால், இன்பதுன்ப நுகர்ச்சிக்கான மேல்-கீழ் உலகங்கள் உண்டென உளறுவானேன்? சிற்றின்பமும் சிறுதுன்பமும் நுகர்வதற்கு இவ்வுலகமும், பேரின்பமும் பெருந்துன்பமும் நுகர்வதற்கு அவ்வுலகங்களும் என்றால், சிற்றின்பங்களையும் சிறுதுன்பங்களையும் நுகர்வதற்கு இருவேறு தனித்தனி உலகங்கள் இங்கும் இருத்தல் வேண்டுமன்றோ! இன்பம் நுகர்வோரும், துன்பம் நுகர்வோரும் இவ்வுலகத்தில் ஒருங்கிருக்கும் போது, பேரின்பப் பெருந்துன்பங்களை நுகர்வதற்கு அங்கும் ஒரு உலகம் இருந்தால் போதாதா? நரக உலகம்—மோட்ச உலகம் என்ற இரண்டு உலகம் அங்கு இருப்பானேன்? இங்கு மட்டும் ஒன்று இருப்பானேன்?

இனிப், பேரின்பம் அழிவற்றதும், சிற்றின்பம் அழிவுடையதென்றும் கூறுவதன் பொருள் என்ன? இன்பமோ அன்றித் துன்பமோ, இரண்டில் ஒன்று பெரிது மற்றது சிறிதென்று கூற முடியுமா? ஒருவனால் நுகரப்படும் இன்ப துன்பங்கள் இன்னொருவனுக்குப் பெரிது சிறிதாகக் காணப்பட்டபோதிலும், அவற்றை நுகர்பவனுக்கு அவை இன்ப துன்பங்களாகவேதான் தோன்றும்! இன்பத்தை இன்பமாகவும், துன்பத்தைத் துன்பமாகவும் கொள்ள முடியுமேயன்றி, அவற்றுள் பெரிது சிறிதென்ற வேறுபாடு காணமுடியாதே! பாலுக்குச் சர்க்கரையும், பழங்கஞ்சிக்கு உப்பும் இல்லையென்று கவலைப்படும் இருவகைப்பட்டார்க்கும் ஏற்படும் துன்பம், அவ்விருவர் நிலைக்கும் ஏற்ப ஒன்றாகத்தானே இருக்கும்! எனவே, சிற்றின்பபேரின்பங்களும், அவற்றை நுகர்வதற்கான வெவ்வேறு தனி உலகங்களும் இருப்பதாகக் கூறுவது பொய்யாகத்தானே இருக்க முடியும்!

இனி, நல்லது செய்பவனுக்கு இன்ப உலகமும் தீயது செய்பவனுக்குத் துன்ப உலகமும்ஒரே கடவுளால் கொடுக்க முடியுமா? அப்படிக் கொடுப்பது தான் கடவுள் இயல்பென்றால், அத்தகைய கடவுள் நல்லவரா? கெட்டவரா? எல்லாரும்நல்லவர்களாகவேஇருக்கவேண்டுமென்று விரும்பும் கடவுள், கெட்டவர்களையும், அவர்கள் எதிரே கெட்டசெய்கைகளையும் ஏன் படைத்தார்? கன்னக்கோலைப் படைத்தக் கடவுளை முழுத்திருடன் என்று கூறுவது குற்றமா? கடவுள் நல்லவர் என்றால், அவர் கையில், சூலம்—வேல்—வாள்—சக்கரம் முதலான கொலைக் கருவிகள் இருப்பானேன்? இவற்றையும் இன்ன பிறவற்றையும், படக்காட்சிகளில் கடவுளரின் வடிவங்களைக் காட்டி நடிப்பதால், அவருடைய கௌரவத்திற்குக் குறைவு ஏற்படுகிறது என்று எண்ணுபவர்கள் சிந்தித்துப் பார்ப்பதோடு, கடவுள் என்பதாக ஒன்று உண்டென்று கொண்டாலும் அல்லது இல்லையென்று கூறினாலும், அப்படிப்பட்ட ஒன்று நமக்கு (உலகுக்கு)த் தேவைதானா? அப்படித் தேவைப்பட்டாலும் இன்று நம்முன் காட்டப்படும் கடவுளால் உண்டான — உண்டாகும் நன்மைகள் என்ன என்பதையும் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

கடவுளின் கௌரவத்தைக் காப்பாற்றவேண்டும் என்று சொல்லிக் கொள்ளும் சென்னை சர்க்கார், தாங்கள் காப்பாற்ற நினைக்கும் கடவுள் யார்? எந்தக் கடவுளின் கௌரவத்தைக் காப்பாற்ற எண்ணுகிறார்கள்? இயேசுவைப் போலவோ அல்லது அல்லாவைப் போலவோ ஒரே கடவுள் நமக்கிருக்கிறதா? நம்முடைய கடவுளர் ஒருவரல்ல, பலராயிற்றே! 28—12—48-ல் மத்திய சட்டசபையில்கூட இதுபற்றிப் பேசப்பட்டிருக்கிறதே! இந்துக்களின் கடவுள் ஒன்றல்ல, மூன்று இருப்பதாக டாக்டர் அம்பேத்கார் மத்திய சட்டசபையில், இந்திய யூனியன் தலைவர் (President) விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொள்வது பற்றிப் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறாரே!

> "கடவுள் என்ற சொல் பல மதத்தினருக்குப் பலவிதமாகப் பொருள்படுகின்றது. இந்து மதப்படி 'கடவுள்' என்ற சொல்லுக்கு ஒரு மனித சக்திக்கு அப்பாற்பட்ட சக்தியைக் குறிக்கிறது. விஷ்ணு, சிவன், பிரம்மா என்ற பல பெயர்கள் மூலம்தான் 'கடவுள்' என்ற சொல்லுக்கு அவர்கள் வடிவம் கற்பிக்கிறார்கள். இப்படிப் பல பெயர்கள் இருப்பதால்தான் 'கடவுள்' என்ற சொல்லை இத்தீர்மானத்தில் சேர்க்கவில்லை."

என்று டாக்டர் அம்பேத்கார் கூறியிருக்கிறாரே! நம்முடைய கடவுள் யார்? அவர் எப்படிப்பட்டவர் என்பதே இன்னும் முடிவு செய்யப்

படாத இந்த நிலையில் — 'கடவுள்' என்ற சொல்லே நம்முடைய மதக் கோட்பாட்டின்படி நாம் கையாள்வதற்கு முடியாமல் இருக்கும் இந்த இரங்கத்தக்க நிலையில், நாம் எந்தக் 'கடவுளி'ன் கௌரவத்தைக் காப்பாற்றுவது என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இனி, இப்போது, படக்காட்சிகளில் தோன்றும் சிவன்—திருமால் ஆகியவர்களின் கடவுள் தன்மை குறித்தெழுந்த போர் அவ்விருவருக்குமிடையே இன்னும் தீர்ந்தபாடில்லை. சிவன், திருமால் ஆகிய இருவரின் உயர்வு தாழ்வுக்காக நிகழ்ந்த போரைக் குறிக்கும் நூல்கள் பல நம்முன் உள்ளன. இந்நூல்களைப் பார்த்தால், மக்கள் தம் மனத்தாற் கூட நினைக்க விரும்பாத பல அருவருப்பான முறைகளை அக்கடவுளர் கையாண்டுள்ளனர் என்ற உண்மை விளங்கும். இவ்விரு கடவுளருள்ளும் எவர் உயர்ந்தவர் என்ற போரைக் குறிப்பதும், இவ்விருவரில் எவர் பெரியவர் என்ற முடியாத முடிவைக் குறிப்பதுமான நூல்களே இன்றைய சைவ—வைணவர்களின் வழிபாட்டு நூல்களாகவும், முடிந்த முடிபைக் கூறும் சித்தாந்தங்களாகவும் விளங்குகின்றன. இந்நூல்களில் சொல்லப்பட்டிருக்கும் அறிவுக்குப் புறம்பான — அருவருப்பான நிகழ்ச்சிகளைத்தான் படக் காட்சியின் வாயிலாக நடித்துக் காட்டத் தவறினால், நாட்டில் சினிமாத் தொழிலும், நாடகக் கலையும் மாய்ந்தொழியும் என்று இப்பவே சர்க்காரை மிரட்டக் கிளம்பிவிட்டன சில பத்திரிகைகள்.

சர்க்காரோ, கடவுளரின் கௌரவம் காப்பாற்றப்பட வேண்டுமானால், படக்காட்சிகளில் கடவுள் வடிவம் எடுப்பதைத் தடுக்கவேண்டுமென்று கூறுகிறது. வேறு சிலரோ, படக்காட்சிகளில் கடவுள் வடிவம் எடுத்து நடிக்கப்படாவிட்டால், பாமர மக்கள் நாடகத்திலும், படக்காட்சியிலும் தெய்வீக வரலாறுகளைக் கண்டு களிக்க முடியாமல் ஏமாந்துவிடுவார்கள் என்று கூறுகின்றனர்.

நாம், சர்க்காரின் இந்த ஏற்பாட்டை அப்படியே வரவேற்க முடியாதபடி, சர்க்கார் இதற்குக் கொண்டிருக்கும் அடிப்படைக் காரணம் தடை செய்வதாய் இருந்தபோதிலும், பட உலகில் இதனால் ஒரு மாறுதல் ஏற்பட வழிகோல முடியும் என்ற நம்பிக்கை நமக்கிருப்பதால், சர்க்காரின் இந்தச் சிக்கலான - தெளிவற்ற ஏற்பாட்டை வரவேற்க வேண்டியவர்களாகவே இருக்கிறோம். பாதை திறக்கப்பட்டு விட்டால், அதன் நடுவே உள்ள கற்களையும் முட்களையும் அகற்றுவது அவ்வளவு கடினமல்ல என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது. எனவே சர்க்கார் இப்போது செய்துள்ள ஏற்பாடு கல் முள் நிறைந்ததாக இருந்தாலும், நம்முடைய அடிப்படை நோக்கம் அந்த ஏற்பாட்டில் இலைமறை காயாக இருப்பதால், அதனை எதிர்ப்போரைக் கண்டு சர்க்கார் தன்னுடைய திட்டத்தைக் கைவிட்டு விடக் கூடாதென்பதே நமது விருப்பமும் வேண்டுகோளுமாகும். நமது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள்,

> "பரமசிவன் அருள்புரிய
> வந்து வந்து போவார்"

என்று கூறி நம் நாட்டுப் படக்காட்சிகளின் கீழ்நிலையை விளக்கியதற்கேற்பச், சர்க்கார் இந்த அளவுக்காவது சீர்திருத்தம் செய்ய முற்பட்டதே என்று மகிழ்கிறோம். ஆனால்,

> சளக்கர் பலர் நிரம்பிய இந்நாட்டில்
> சர்க்கார் கொண்டுவருமித்
> திட்டம்
> விளக்கமுற வெற்றி பெறுமோ
> வெம்பிப் போமோ
> வெம்பாது வெற்றிபெறினு
> மதனைக்
> கொளக்கருதுமத மாயைக் குரங்கு
> கவர்ந்திடுமோ
> கவராது நடைமுறைக்கு
> வரினுமதனைத்
> துளக்கமற மக்கள் நுகர்வரோ
> மண்டைக்கர்வம்
> பிடிக்குமோ எதுநேருமோ
> ஏதுமறிந்திலமே!

# சிறைச்சாலை என்ன செய்யும்?

—✲—

25-12-48-ல் காஞ்சிபுரத்தில், "இரணியன் அல்லது இணையற்ற வீரன்" நாடகத்தைச் சர்க்காரின் தடையை மீறி நடித்துச் சிறை சென்று திரும்பிய தோழர்களுக்குச் சேலம் தோழர் ஏ. சித்தையன் அவர்கள் தலைமையில் வரவேற்பு விழா நடைபெற்றது. திராவிடர் கழகச் செயலாளர் தோழர் பெருமாள் வரவேற்பிதழை வாசித்தளித்தார். அதுசமயம் தோழர் அண்ணாத்துரை நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

"தோழர்களே,

இங்கு, மேடை மீது வீற்றிருக்கும் தோழர்கள், மூன்று நாட்களுக்கு முன்தான் வேலூர் சிறையிலிருந்து விடுதலையாகி வந்துள்ளார்கள். இவர்கள் செய்த குற்றமென்ன? இவர்களை ஏன் அரசாங்கம் சிறைக்கனுப்பிற்று? இவர்கள், அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதிசெய்தார்களா? பேச்சுரிமை, தங்கள் பிறப்புரிமை என்று பேசினார்கள்! கருத்துக்கு இருட்டடிப்பு அடாது என்று கூறினார்கள்! கலைக்குத் தடை விதிப்பது தகாது என்று சொன்னார்கள்! கழிகளைக் கரத்தில் பிடித்துக்கொண்டா தங்கள் கொள்கையை வெளியிட்டனர்? பலர் அறியாமலும் பேசவில்லையே! விளக்கொளியில், வெட்டவெளியில், பலர் முன்னிலையில், முகத்திலே சாயம் பூசிக்கொண்டு, உள்ளத்திலே உறைந்துகொண்டிருந்த கோட்பாடுகளை, வெளிக்கு எடுத்துக் காட்டினர். தர்மவான்கள் ஆட்சியில் இதற்கு இடமில்லாமல் போய்விட்டது! தடுத்தாட்கொண்டனர்! சிறையிலடைத்தனர், சீரற்ற ஆட்சியாளர்! திரும்பியும் விடுதலையாகி நம்முன்னர் வந்துள்ளார்கள் நண்பர்கள்! அவர்களை நான் வரவேற்கிறேன்—வாழ்த்துகிறேன் —உங்கள் சார்பாக!

எனது நண்பர்களின் தொழில் கூத்தாடுவதன்று. இவர்களைச் சிறையில் அடைத்த துரைத்தனத்தாரும் கூத்தாடுவதைத் தொழிலாக மேற்கொண்டிருப்பவர்கள் அன்று! இரு வெவ்வேறு கூத்தாடும் குழுவினருக்கு வேண்டுமானால் போர் மூளுவதும், ஒருசாரார் மற்றொருசாராரை அடக்கி ஒழிக்கப் பார்ப்பதும் முறையாக இருக்கலாம்! இதனைத் தொழிலே ஏற்படும் கழுத்தறுப்புப் போட்டி என்றும் நினைத்துப் பொறுத்துக்கொள்ளலாம். ஆனால், கூத்தைத் தொழிலாகக் கொண்டிருக்

காதஇருசாராருக்கும்பகை ஏற்பட்டு விட்டிருக்கிறது! அதுதான் இதில் விசித்திரம்!

இரணியன் கதையை அந்தக் காலத்தில், எவனோ ஒருவன், எதற்காகவோ எழுதினான். அந்தக் கதாசிரியனும் இரணியனைக் கண்டவன் அல்ல. பிரகலாதனையும் அவன் பார்த்ததில்லை. லீலாவதியிடமும் பழகினதில்லை. நரசிம்மத்தையும் தரிசித்ததில்லை. என்னமோ கதை எழுதினான்; அது மக்களில் பலருக்குப் பிடித்திருக்கவே, அதனை நாடகமாகக் கூத்தாடினார்கள், நடித்தனர். ஊர் ஊராக நடித்தனர். பஜனைக் கூடங்களாகப் பார்த்து நடித்தனர். இன்றும் நடித்து வருகின்றனர். ஆனால் எண்ணிக்கை குறைந்திருக்கிறது இன்று.

புரட்சிக் கவிஞர் கற்பனையில், வேறொரு இரணியன் உருவானான். அந்த இரணியனை, நாடக உருவில் உலவவிட்டார் வெளியில். கடந்த பதினைந்து ஆண்டுகளாக, சில இடங்களில், அன்று இருந்த மந்திரிகள் முன்னிலையில், நமது தோழர்கள், கவிஞர் கண்ட இரணியனை, நாடக மேடைக்குக் கொண்டுவந்து நிறுத்தி இருக்கிறார்கள். இன்று இங்குள்ள இரணியன், இரமணரிஷியின் சீடரால் குற்றவாளியாக்கப்பட்டது போல், அன்று, அந்த மந்திரிகளால் செய்யப்படவில்லை. அவர்கள் இருக்கட்டும். ஆச்சாரியார் ஆட்சிக் காலத்திலும் கவிஞரின் இரணியன் சிலபல மேடைகளில் தோன்றிக் கொண்டு தான் இருந்தான். ஆச்சாரியார், இரமணாஸ்ரமத்துத் தூதர்போல் அல்லாமல், இரணியனுக்கு இடைஞ்சல் ஒன்றும் செய்யாமல் இருந்து விட்டார். இவ்வளவு காலத்திற்குப் பின்னர், இவர்களுக்கு, இந்த ஆளவந்தார்களுக்கு, இரணியன் மீது கோபம் பிறந்து விட்டது. தடுத்து விட்டனர் நாடகம் ஆடக் கூடாது என்று! தகுதியற்ற தடையை மீறினர் இந்தத் தோழர்கள். அதற்காகச் சிறைசென்று திரும்பி வந்துள்ளனர்.

தடை விதித்த துரைத்தனத்தார், எங்கள் இரணியன் கதையிலே கண்ட குறை என்ன? களங்கமென்ன? இதுவரை எடுத்துக் காட்டினரா? கேட்டோம். பத்திரிகை வாயிலாகக் கேட்டோம் — பொது மக்களைச் சாட்சியாகக்கொண்டு பல மேடைகளில் நின்று கேட்டோம். பேசாப் பதுமைகளாக இருந்து விட்டது அரசாங்கம்! அறிவு மந்தம் மட்டும் அல்ல; செவியும் செவிடாக இருக்கிறது இதற்கு!

எங்கள் இரணியன் நாடகத்தை, இதுவரை எந்த அமைச்சராவது, பார்த்திருப்பாரா? ஏட்டிலாவது படித்திருப்பாரா! "இந்தப் பகுதி குறையுடையது; இது இயற்கைக்குப் பொருத்தமற்றது" என்று எடுத்துக் காட்டி, அதனை நீக்கி விடுங்கள் என்றாவது கூறி இருப்பார்களா? இந்த நல்ல காரியத்தையா அவர்களிடமிருந்து எதிர்பார்ப்பது?

நாங்கள் ஏதாவது பழைய இரணியன் நாடகத்தை ஆடக்கூடாது என்று கூறுகிறோமா? அதனை எவராவது ஆடினால், அங்கு சென்று நாங்கள் குழப்பம் விளைவிக்கிறோமா? நாங்கள் ஒரு மூலையில் எங்கள் இரணியனை நடித்தால், பழைய இரணிய விலாசத்தை ஏற்கனவே ஆடி வந்தவர்கள் மற்றோர் மூலையில் ஆடுவதுதானே முறையாகும்! அதற்கு ஆள் பஞ்சம் ஏற்பட்டு இருக்குமானால், இன்றுள்ள அமைச்சர்கள் —அவர்களைத் தாங்கிக்கொண்டிருக்கும் சட்டசபை அங்கத்தினர்கள்— ஊர் ஊராகத் தெருத் தெருவாக— முகத்திலே சாயம் பூசிக்கொண்டு, நன்றாக ஆடட்டுமே, யார் தடுக்கப் போகிறார்கள்! அப்பொழுது வேண்டுமானால், நாங்கள் போட்டிக்கு வராமல் இருந்துவிடுகிறோம்!

இந்த அமைச்சர்களுக்குப் பழைய இரணியன், ஏதாவது அடுத்த வீட்டுக்காரனா? நெருங்கின உறவா? பின் எதற்கு, இவர்களுக்கு, அவனிடத்தில் இவ்வளவு பற்றும் பாசமும்? அவனிடத்தில் இவர்களுக்கு அன்பு இருப்பதாக இருந்தபோதிலும், எங்களைப் பகைத்துக்கொள்ள வேண்டிய அவசியந்தான் என்ன? அந்த இரணியனைத் தடுக்காதிருக்கும்பொழுது, எங்கள் இரணியனை மட்டும் தடுக்கவேண்டிய அவசியந்தான் என்னவோ? சென்ற காலத்தில், வெள்ளையனை விரட்ட விடுதலைப் போர் நடந்த நேரத்தில், காலஞ்சென்ற திருச்சி விஸ்வநாததாஸ், நாடகமேடையில் "கொக்கு பறக்குதடி பாப்பா—வெள்ளை கொக்கு—" என்று பாடுவார்.

அவர், நாடகத்தையே வாழ்க்கைச் சாதனமாகக் கொண்டிருந்தவர். அன்று இருந்த வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு, அந்தப்பாட்டைக் கேட்பதென்றாலே, தாங்கிக் கொள்ள முடியாத வேதனையாக இருந்தது. பாட்டைப் பாடக்கூடாதென்று தடைசெய்தது. மீறினார் விஸ்வநாததாஸ், சிறையில் தள்ளப்பட்டார். தீவிர தேசபக்தர் என்ற பட்டியிலும் சேர்க்கப்பட்டார். பாடக்கூடாது என்று தடை செய்த சர்க்காரை, தாக்கிப் பேசினர் தீப்பொறி பறக்க. பேச்சுரிமையைப் பறிப்பது அடுக்குமா? என்று அடித்தொண்டையால் அலறினர். கண்டனக் கூட்டங்கள் பல போட்டனர். சைத்தான் சர்க்கார் என்று கண்டித்தனர். இவ்வளவும் பேச்சுரிமையைக் காக்க எடுத்துக் கொண்ட சிறந்த நடவடிக்கைகள்! ஆனால் இன்று?

அதே தேசபக்தர்களால் நடத்தப் பெறும், தர்ம அரசிலே, பேச்சுரிமை கொலை செய்யப்படுகிறது! மக்கள் — உணர்ச்சியுள்ளவர்கள்— வெறும் மரக்கட்டைகள் அன்று! மண் பதுமைகளுமன்று! பேச்சுரிமை—ஒவ்வொருவருக்கும்—எவர் ஆட்சியிலும் — என்றும் இருந்து தீரவேண்டிய அடிப்படையான உரிமைகளில் ஒன்றாகும். அதனை மறுக்கிறார் ஓமந்தூரார், அதிகாரம் அவரிடத்தில் எப்படியோ அகப்பட்டுக் கொண்டிருக்கிறது என்னும் காரணத்தால்!

நாடக விஷயந்தான்–கலைத்துறை தான்—இந்த இலட்சணம் என்றால்– இந்தத்தர்மாத்மாக்கள் ஆட்சி வேறு எந்த வகையில்தான் சிறந்ததாக இருக்கிறது? எந்தக் கட்சியினரை, ஏதாவது காரணம் கூறி, சிறையில் அடைக்காமல் இருக்கிறார்கள்? கம்யூனிஸ்டுகளை விட்டுவிட்டார்களா? 'கம்யூனிஸ்டுகள் அகிம்சையில் நம்பிக்கையில்லாதவர்கள். பலாத்காரத்தின் மூலம் ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றக்கூடச் செய்கிறார்கள்' என்று கூறி, சந்துபொந்துகளிலெல்லாம் தேடிப்பார்த்து, அகப்பட்டவர்களை எல்லாம் அடைத்தாகிவிட்டது சிறையில். "சோஷலிஸ்டுகளா, அவர்கள் பதவிபயித்தம்கொண்டு, வேலையில்லாத வேளையில் வேலை நிறுத்த அழிவு வேலையில் ஈடுபட்டு, பதவியைக் கைப்பற்றப் பிரயத்தனப் படுகிறார்கள்" என்று கூறிக் கொண்டு, அவர்களில் சிலரையும் சிறைச்சாலையில்தள்ளியாகிவிட்டது. மேலும் சிலரைத் தள்ள முயற்சிக்கப்படுகிறது. இது கூட ஆச்சரியமல்ல! சொந்தக் கட்சியினரையே,

விடுதலைப் போராட்ட காலத்தில் ஒன்றுபட்டுக்கூட்டாக ஒத்துழைத்த வரையே, இன்றும் காங்கிரஸ் முத்திரையை விடாமல் சுமந்துகொண்டு இருப்பவரையே, மாயவரம் தோழர் நாராயணசாமியையே, சிறைச்சாலையில் தள்ளின பெருமை—அதுவும் விசாரணை இல்லாமலே அடைத்து வைத்திருந்த அற்புதம் ஆப்ரிக்கப் பாலைவனத்தில் கூட காணமுடியாத ஆச்சரிய சம்பவமாகும்!

தோழர் நாராயணசாமி செய்த குற்றந்தான் என்ன? கம்யூனிஸ்டுகள் போன்று அழிவு வேலையிலா ஈடுபட்டார்? கம்யூனிஸ்டுகள் என்ற நாற்றமே அவருக்குப் பிடிக்காதே! அவர் செய்ததெல்லாம், வெளியில் சொன்னதெல்லாம், மிராஸ்தாரர்கள் கிசான்களை (உழவர்களை) நடத்தும் முறை கேவலமானதாக இருக்கிறது; உழவர்களையும் தங்கள் போன்ற மக்கள் என்று மதித்து நடந்துகொள்ளவேண்டும் மிராஸ்தாரர்கள் என்று உழவர்களுக்காகக் கொஞ்சம் மனிதாபிமானத்தோடு பரிந்து பேசினதுதான். இந்தப் பேச்சு—சொந்தக் கட்சியைச் சேர்ந்தவர் பேச்சாக இருந்தபோதிலும்—ஓங்கார சொரூபியான ஓமந்தூராருக்குக் கோபத்தை மூட்டிவிட்டது! தோழர் நாராயணசாமிக்கு, சிறை, வாழ்விடமாக்கப்பட்டது!

'நம்மவர் ஆட்சி' என்று சொல்லிக் கொள்ளக் கூட வெட்கமாக இருக்கிறதே! ஏதாவது ஒரு தொழில்—பலருக்கு வேலைகொடுக்கும் நிலையில்—புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதா, இந்த மூன்று ஆண்டுகளில்? விரல் மடக்கட்டும், விஷயம் தெரிந்தவர்கள், பார்ப்போம். கங்கையும் யமுனையும், துங்கபத்திரையும், கோதாவரியும் கிருஷ்ணையும், காவிரியும் கொள்ளிடமும், பெண்ணாறும் தாம்பரபரணியும் பாயும் நாடு இந்தப்பரந்த இந்தியா, என்று சொல்லுகிறோமே! 'அன்னை முப்பதுகோடி முகமுடையாள்' என்று பாடுகிறோமே! இங்கு பஞ்சமும் பட்டினியும் பக்கலைப் பிடித்து வாட்டுகிறதே! இதற்குப் பரிகாரம் தேடாமல், தரிசு நிலங்களை என்றும் போல் விட்டுவிட்டு, வெளிநாட்டில் உணவுதேடத் தூதுவர்களை அனுப்புகிறீர்களே, வெட்கமில்லையா? அதுவும் எவரை அனுப்புகிறீர்கள்? முன்னாள், மூர்த்தியின் தேர்தலின் போது, 'தாலியறுத்த முதலியாருக்கா ஓட்டு' என்று பழி சுமத்தித் தோற்கடித்த அதே இராமசாமியை அல்லவா, அமெரிக்கா அனுப்புகிறீர்கள்?

எங்களுக்குத் தடை விதிக்கும் அரசாங்கம், இன்று எவர் எவரைக் கூட்டாளிகளாகக் கொண்டிருக்கிறது தெரியுமா? பண்டிதர் மந்திரி சபையில் சட்ட மந்திரியாக இருக்கிறாரே டாக்டர் அம்பேத்கார், அவர் என்ன காங்கிரஸ்காரரா? அன்றும்—ஏன்—இன்றும் காங்கிரசை எதிர்த்துக்கொண்டு இருப்பவர்தானே! சிலநாட்களுக்குமுன்புகூட—பம்பாயில், தாழ்த்தப்பட்டோர் என்பவர்களின் கூட்டத்தில் பேசுகின்றபொழுது, "காங்கிரசில் சேராதீர்கள்—அதனை நம்பாதீர்கள்—அது கடலிலே சென்றுகொண்டிருக்கிற கப்பல்தான் — ஆனால் அமிழ்ந்துகொண்டே இருக்கிறகப்பல்" என்று கூச்சம் துளியுமின்றிக் கூறினாரே? இன்னும் மந்திரியாகத்தானே இருக்கிறார்? ரோஷம் பிறக்கவில்லையே இவர்களுக்கு!

நிதிமந்திரியாக இருந்து விலகிய சண்முகம் யார்? அவர் ஓர் முதலாளி அல்லவா? அவர் இடத்திற்கு வந்திருக்கிற ஜான்மத்தாய், விடுதலை போராட்டத்தில் எந்தக் கட்டத்தில் கலந்து கொண்டவர்? தொழில் மந்திரி முகர்ஜி யார்? இந்து மகா சபையின் தலைவராக இருந்தவரல்லவா? அத்துடன் காங்கிரசையும் எதிர்த்துக்கொண்டு இருந்தவர் ஆயிற்றே! இவ்வளவும் எதனைக் காட்டுகிறது? காங்கிரசிலே உள்ள அறிவுப்பஞ்சத்தையும் ஆள்பஞ்சத்தையும் அல்லவா அம்பலப்படுத்துகிறது? அடிக்கட்டுமே தந்தி, இவர்களை எல்லாம் விலக்கச்சொல்லி! இவர்கள் ஏன் தேசபக்தர்கள் கண்களில் இன்னும் படவில்லை? எப்படித்தான் சகித்துக்கொண்டிருக்கிறார்களோ இவ்வளவையும்!

"பர்மிட்டுக்குப் பல்லிளிக்காதே; லைசன்சுக்கு நாக்கைக்குழைக்காதே; பதவிக்குப் பறக்காதே; ஒழுக்கமாக நடந்துகொள்" இவ்வாறு கன்னியாகுமரிமுதல் ஜெயப்பூர் காங்கிரஸ் வரையில் சிரிப்பாய்ச் சிரிக்கிறதே! எச்சரிக்கை தீர்மானரூபத்தில் வருகிறதே! சாதாரண பேர்வழிகளுக்கா இந்தத் தாக்கீது? இல்லையே! தியாகிகளுக்கன்றோ இந்த உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது? இதன் உட்பொருள் என்ன? சாவித்திரியைப் பார்த்துச் சத்தியவான் 'அண்டைவீட்டுக்காரரோடு பேசாதே, பக்கத்துவீட்டுக்காரரைப் பார்க்காதே" என்று கூறினால் சாவித்திரியின் போக்கிலே நேர்மை இருக்கிறது என்றா அர்த்தம்? சாவித்திரியின் ஒழுக்கத்திலே ஓட்டை கண்டிருக்கிறது என்பது தானே பொருள்?

நாங்கள் சின்னக்கட்சி என்றுபேசுகிறார்கள் அமைச்சர்கள். நாங்கள் மறுக்கவில்லை இதனை. ஆனால் அமைச்சர்கள் போக்கு, அவர்களின் இந்தக்கூற்றைப் பொய்யாக்கி விடுகிறதே. சின்னக்கட்சிக்காரர்களாகிய நாங்கள் பேசுவது மக்களுக்குப் பிடிக்காமல் போனால், மக்களே எங்களை ஒதுக்கித்தள்ளிவிடுவார்கள் என்று உறுதியோடு ஆட்சியாளர்கள் இருந்துவிட்டிருக்கலாமே? ஆட்சியாளர்கள் அப்படி இருக்கவில்லையே! பத்திரிகைகளில், மக்கள்

2-ம் பக்கம் பார்க்க




— விற்பனையாளர்கள் தேவை —
சிறந்த முறையில் உயர்ந்த சிவபுரிபுகையிலையினால் தயாரித்த காரம், மணம், குணம் பொருந்திய எங்கள் ராஜாஸ் பரிமளபுகையிலை, பஸ்பம், துண்டு புகையிலையும், வாசனைப் பரிமளப்பாக்குத்தூளையும் வாங்கி உபயோகியுங்கள்
தயாரிப்பவர் ராஜா & சன்ஸ்
19. வரதுவாசல்தெரு, சின்னகாஞ்சீபுரம். S.I.Ry


Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street, Kancheepuram.